இதழ் 348
19 யூலை 2025
16 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube. com/@IlakkuWeb2. 0
LIKE US! facebook. com/ilakku. ilakku. 10
FOLLOW US! twitter. com/Ilakku1



சூ.யோ. பற்றிமாகரன்

## "மக்கள் மேலான போரை" 1983 யூலையில் ஈழத்தமிழர்கள் மேல் பிரகடனப்படுத்திய சிறிலங்காவே பிரிவினைவாதி பயங்கரவாதி



## ட்ரம்பின் மாற்றம் அழிவு யாருக்கு?

வேல்ஸில் இருந்து **அருஸ்**



## "கறுப்பு யூலை" ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாச இருவரின் கூட்டுச்சதி!

பா. அரியநேத்திரன்

info@ilakku. org

© 2025 இலக்கு இணையம்

## கச்சதீவை மீட்டெடுப்பது இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வாகாது:

### பாரதிய ஜனதா கட்சி



கச்சத்தீவை மீட்டெடுப்பது மட்டும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்காது என்று பாரதிய ஜனதா கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான இந்திய மத்திய அரசு, தமிழகக் கடற்றொழிலாளர்களைப் பாதுகாக்கத் தவறியுள்ளது என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நிலையில், இலங்கை–இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு தரப்பினரையும் ஒருமித்த உடன்பாட்டுக்கு கொண்டு வருவதே முக்கியமானதாகும் என்று பாரதிய ஜனதா கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பாரதிய ஜனதா கட்சியின் பேச்சாளர் நாராயண் திருப்பதி கூறுகையில்: “பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் கடற்றொழிலாளர்களும், இந்தியத் தமிழ் கடற்றொழிலாளர்களும் தொடர்பாக பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. அத்துடன், அவர்களுடன் பேசி ஒரு தீர்வை காணாவிட்டால், இந்தப் பிரச்சினை முடிவடையப் போவதில்லை” என்றும் நாராயண் திருப்பதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 1974ஆம் ஆண்டு மத்திய காங்கிரஸ் ஆட்சியும், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் இருந்தபோதே கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது என்றும், அதன்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பலாலி அம்மன் ஆலயம்: 35 ஆண்டுகளு-க்குப் பிறகு தற்காலிக அனுமதி



யாழ்ப்பாணம் – பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு தற்காலிக பாதை ஊடாக சென்று வழிபாடுகளை மேற்கொள்ள இராணுவத்தினர் நேற்று (17) முதல் அனுமதி வழங்கியுள்ளனர்.

அதன்படி, காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை ஆலய வழிபாடுகளை மேற்கொள்ள முடியும். பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளுமின்றி சென்று வழிபட 35 வருடங்களுக்குப் பிறகு, கடந்த 27ஆம் திகதி அனுமதித்த இராணுவத்தினர், மீண்டும் 28ஆம் திகதி பாதுகாப்பு காரணங்களை சுட்டிக்காட்டி ஆலயத்திற்கு செல்ல அனுமதி மறுத்திருந்தனர்.

இந்த நிலையில், நேற்றைய தினம் முதல் ஆலயத்திற்கு செல்ல இராணுவத்தினர் மீண்டும் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஆலயத்துக்குச் செல்வதற்காக அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தங்களது சொந்த நிதியிலேயே குறித்த பிரத்தியேகப் பாதையை அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா கலாசார விழா: மரபுகளை மீட்டெடுத்த ஊர்திப் பவனி நிகழ்ச்சி



மரபிழந்த பாரம்பரிய பண்பாட்டை வெளிப்படுத்தி, வவுனியா பிரதேச செயலக பண்பாட்டு விழாவைமுன்னிட்டு ஊர்திப் பவனி ஒன்று இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலகம் மற்றும் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அலகின் அனுசரணையில், வவுனியாபிரதேச கலாசார பேரவையும், பிரதேச கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்திய இந்த பண்பாட்டு ஊர்திப் பவனி, பிரதேச செயலாளர் இ. பிரதாபன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வூர்திப் பவனி, தமிழர் பாரம்பரியம், கலாசாரம்,வரலாறு, தொல்லியல், கலைகள் என்பவற்றை பறைசாற்றி,கிராம மக்களின் பங்களிப்புடன்முன்னெடுக்கப்பட்டது.

இதில், தமிழர் வாழ்வியலின் பாரம்பரியத்துடன் தொடர்புடைய விவசாய முறைகள், நீர்ப்பாசன முறைகள், உணவு தயாரித்தல், கைவினை உற்பத்திகள், வழிபாட்டு முறைகள், சடங்கு முறைகள், கிராமிய கலை மரபுகள், கிராமிய உணவுப் பழக்கவழக்கம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை தாங்கிய 47-க்கும் மேற்பட்ட ஊர்திகள் இதில் கலந்து கொண்டிருந்தன.

## இந்தியா-சீனாவுக்கு நேட்டோ விடுத்த எச்சரிக்கை

இந்தியா, சீனா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் ரஷ்யாவுடன் தொடர்ந்து வணிகம் செய்தால் “கடுமையான விளைவுகளை” சந்திக்க நேரிடும் என்று நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட்டே எச்சரித்துள்ளார்.



உக்ரைனுக்கு புதிய இராணுவ உதவிகளை வழங்கப்போவதாகவும், 50 நாட்களுக்குள் அமைதி ஒப்பந்தம் எட்டப்படாவிட் டால், ரஷ்ய பொருட்களை வாங்குபவர்கள்மீது 100% இரண்டாம் நிலை வரிகள் விதிக்கப்போவதாகவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அச்சுறுத்தியதைத் தொடர்ந்து, செவாயன்று அமெரிக்க செனட்டர்களுடனான சந்திப் பிற்குப் பிறகு ரூட்டேவின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளது.

“இந்த மூன்று நாடுகளுக்கும் – குறிப்பாக நீங்கள் தற்போது பெய்ஜிங்கிலோ அல்லது டெல்லியிலோ வசிக்கிறீர்கள் என்றால், அல்லது நீங்கள் பிரேசிலின் ஜனாதிபதியாக இருந்தால்-இதைப்பற்றி நீங்கள் தீவிரமாக சிந்திக்க வேண்டும். ஏனெனில் அது உங்களை மிகவும் கடுமையாக

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## காசாவில் கட்டப்படும் Concentration Camp

தெற்கு காசாவில் உள்ள ரஃபாவின் இடிபாடுகளை மீறி, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகரித்து வரும் எதிர்ப்புகளைக் கண்டு கேட்டுக்கொள்ளாமல், விமர்சகர்கள் விவரிக்கும் வகையில் பாலஸ்தீனியர்களுக்கான “சிறை முகாம்” (concentration camp) ஒன்றை அமைக்கும் திட்டத்தை இஸ்ரேல் முன்னெடுத்து வருகிறது.

இந்த மாத தொடக்கத்தில் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ்



முதலில் முன்வைத்த இந்த பரிந்துரை, காசாவில் ஏற்கனவே இடம்பெயர்ந்த சுமார் 600,000 பாலஸ்தீனியர்களைக் கொண்ட ஒரு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## வெளிநாட்டு சமூகவலைத்தளங்களுக்கு இரகசியமாக நிதி வழங்கிய பிரித்தானியா



வெளிநாடுகளில் பொதுமக்கள் மத்தியில் தனக்கு சாதகமான கருத்தை ரகசியமாக உருவாக்க, ஒரு ஊடக ஒப்பந்தாரருக்கு இங்கிலாந்து வெளியுறவு அலுவலகம் மில்லியன் கணக்கான பவுண்டுகளை வழங்கியதாக De-classified UK தெரிவித்துள்ளது.

ஐரோப்பா முழுவதும் செல்வாக்கு செலுத்துவோரைக் குறிவைத்து நியமிக்க Zinc Network என்ற நிறுவனம், கிட்டத்தட்ட £10 மில்லியன் ($13 மில்லியன்) பெறப்பட்டுள்ளது என நம்பப்படுகிறது.

லண்டனை தளமாகக் கொண்ட நிறுவனமான ஜிங்க், மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பா மற்றும் பால்டிக் நாடுகளில்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## அமெரிக்கா சீனாவிடம் தனது மூலோபாய நிலையை இழந்து வருகின்றது

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உலக அரங்கிலிருந்து விலகியதாலும், அவரின் வெளியுறவுக் கொள்கையின் உறுதியற்ற அணுகுமுறையாலும், அமெரிக்கா சீனாவிடம் தனது மூலோபாய நிலையை இழந்து வருவதாக ஜனநாயகக்கட்சியினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்பின் முதல் ஆறு மாத பதவிக்காலத்தை ஆய்வு செய்து, அவரது பதவிக்காலம் சீனாவுடன் போட்டியிடும் வாஷிங்டனின் திறனை “கணிசமாகக் குறைமதி



ப்பிற்குட்படுத்தியுள்ளது” என்று அறிக்கை எச்சரிக்கிறது.

அமெரிக்க வெளியுறவுத்துறையில் பணியாளர்கள் குறைபாடு, மேலும் வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா மற்றும் ரேடியோ ஃப்ரீ ஆசியா

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பயங்கரவாத தடை சட்டத்திற்கு 46 வயது இன்று–2025, யூலை 19

### பா. அரியநேத்திரன்



*தமிழனை கொண்டு தமிழனை அழிக்க ஐக்கிய தேசியக் கட்சி அரசால் நிறைவேற்றப்பட்ட சட்டம் இது..!*

*1979, யூலை 19ஆம் திகதி இரவு 10.45 மணிக்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் இலங்கை பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.*

*இந்தச் சட்டம் 1978-இல் தற்காலிக சட்டமாக உருவாக்கப்பட்டு, 1979, யூலை 19 அன்று நிறைவேற்றப் பட்டபின், சரியாக நான்கு வருடங்களில், 1982-இல் நிரந்தரச் சட்டமாக்கப்பட்டது.*

*1979, யூலை 19 அன்று பி.ப. 1 மணிக்கு, மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகவும், நீதி அமைச்சராகவும் இருந்த கே. டவிலியூ. தேவநாயகம் அவர்கள் இந்தச் சட்டத்தை சமர்ப்பித்தார். அது அதே நாளில் நிறை வேற்றப்பட்டது.*

*1976, மே 14 அன்று வட்டுக்கோட்டை தீர்மானத் தின் மூலம் சுதந்திர தமிழீழ பிரகடனத்தைத் தந்தை செல்வா நிறைவேற்றினார். அதற்கான தமிழ்மக்கள் ஆணையைப் பெறும் தேர்தலாக, தந்தை செல்வா மறைந்த பின்னர், 1977, யூலை 21 அன்று, வடகிழக்கில் தமிழர் விடுதலை கூட்டணி அந்தத் தேர்தலை பயன்படுத்தியது.*

*23 தொகுதிகளில் 18 தொகுதிகளில் வட்டுக் கோட்டை தீர்மானத்திற்கு ஆதரவு கிடைத்தது. மட்டக் களப்பு மாவட்ட கல்குடா தொகுதியில் மட்டும் அந்த ஆதரவு கிடைக்கவில்லை. அந்த தொகுதியில் தமிழர் விடுதலை கூட்டணியின் வேட்பாளரான சம்மந்த மூர்த்தியை எதிர்த்து போட்டியிட்ட கே. டவிலியூ. தேவநாயகம் வெற்றி பெற்றார்.*

*தமிழர் விடுதலை கூட்டணியை தோற்கடித் ததற்காக, அவரை பாராட்டி, பிரதமராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்தன அவருக்கு கைலாகு கொடுத்து, நீதி அமைச்சராக நியமித்தார்.*

*தமிழனை வைத்து தமிழர்களுக்கு எதிரான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அதே தேவநாயகத்தின் வாயிலாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றினர்.*

*1977-இல், வடகிழக்கிலுள்ள 18 தமிழ் தொகுதிக ளில் தமிழர் விடுதலை கூட்டணி வெற்றி பெற்று, வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு ஆதரவு பெற்றது. அதன் விளைவாக, இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஒரு தமிழர் (அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்) எதிர்க்கட்சித் தலைவராக ஆனார்.*

*இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் போது, 18 உறுப்பினர்களைக் கொண்ட தமிழர் விடுதலை கூட்டணி வாக்கெடுப்பில் பங்கேற்காமல் விலகியது. எனவே எவரும் எதிராக வாக்களிக்கவில்லை.*

*ஒரு தமிழன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முன்வைக்கிறார்; மற்ற தமிழர்கள் எவரும் எதிர்த்துப் பேசாமல் விலகுகிறார்கள். இது ஒரு வரலாற்று துரோகமாகும்.*

*1977-இல் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்த ஜே.ஆர். ஜெயவர்தன, தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை நசுக்க, 1979, யூலை 19 அன்று இந்த சட்டத்தை கொண்டு வந்தார். கொழும்புத் தெற்கு உறுப்பினர் ஏ.பி.டி. சொஸ்ஸா, "அப்பாவிகளை விசாரணையின்றி தடுத்து வைப்பது ஆபத்து" என எச்சரித்தார். மதவாச்சி எம்.பி. மைத்திரிபால*

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## ஈழத்தமிழர்களின் இறைமை அனைத்துலகால் ஏற்கப்பட்டாலே ஈழத்தமிழருக்கான அனைத்துலக நீதி நடைமுறைச் சாத்தியமாகும்

யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வெளியிட்டுள்ள "செம்மணிப்புதைகுழிகள் கிளறிய சிந்தனைகள்" என்னும் அறிக்கையில், மிதக்கும் பெரும் பனிப்பாறையின் நுனிபோல (Tip of the iceberg) தற்போது வெளிவந்துள்ள 65 புதை உடல சிதைவுப்பகுதிகளும் கிருசாந்தி பாலியல் வன்முறை, இனஅழிப்புக் கொலைஞர் சோமரட்ண ராஜபக்ச குறிப்பிட்ட 600 புதை உடலங்களின் சிதைவுகளில் சிலவெனக் கருதுவது மிகையாகாதெனக் குறிப்பிட்டுள்ளது.

அதே அறிக்கை, "அண்மையில் செம்மணிக்குச் சென்றிருந்த அனைத்துலக மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆணையாளர் வொல்கர் ரேக், அணையா விளக்கு நிகழ்விலும் மூன்று நாட்கள் கலந்து கொண்டு பார்வையிட்ட பின்னரும், அவரது கருத்துக்களில் அனைத்துலக விசாரணையை சுட்டாதிருப்பது கவலைக்குரியது" எனத் தெரிவித்துள்ளது. கூடவே, தமிழர் தாயகத்தில் நடைபெற்ற அனைத்து குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள் உட்பட அனைத்து யுத்தவெறியாட்டங்கள் வழியாக தாயகம் எங்கும் உள்ள மனிதப் புதைகுழிகள் குறித்தும் அனைத்துலக விசாரணையின் அவசியத்தை அறிக்கை புள்ளிவிபரங்களுடன் எடுத்து விளக்கியுள்ளது.

3000 நாட்களுக்கு மேலாக தங்களது கிட்டிய குடும்ப உறுப்பினர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதற்கான நீதிக்காகப் போராடுபவர்களில் 200 பேரளவில் போராட்டக் களத்திலேயே உயிரிழந்த நிலையிலும், இன்னமும் அவர்களுக்கான நீதி கிடையாத நிலையையும் அறிக்கை எடுத்துரைத்துள்ளது.

பலவிதமான வாக்குறுதிகளுடன் மாற்றத்தை ஏற்படுத்துவோமெனப் பதவிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் "பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை" என்ற கதையாகவே ஆட்சி செய்கின்றனர் என்பதையும் இவ்வறிக்கை கூட்டிக்காட்டியுள்ளது. இத்தகைய அறிக்கைகளை அனைத்துலகிலும் உள்ள ஈழத்தமிழர்கள் அனைத்துலக மக்கள் மயப்படுத்த வேண்டுமென்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

இவ்வாரத்தில் தாயகத்தில் இடம்பெற்ற செம்மணிக்கான நீதி கோரல் நிகழ்வுகளில் சிலவற்றை இங்கு தொகுப்பதன் மூலம், தாயகத்தில் மீளவும் மக்கள் விழிப்புணர்வும், கட்சி பேதங்களை மறந்து பொதுவிடயங்களில் ஒருமைப்பாட்டுடன் செயற்படும் மனநிலையும் வளரத் தொடங்குவதை இலக்கு வெளிப்படுத்த விரும்புகிறது.

கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக நீதிக்கான மக்கள் சக்தி அமைப்பினர் மேற்கொண்ட "செம்மணிச் சமூகப்படுகொலைக்கு எதிராக எழுச்சி கொள்வோம்" கவனயீர்ப்பு நிகழ்வில், அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல், "தெற்கில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியினரின் படுகொலைகளுக்கே நீதி கோராத இன்றைய அரசாங்கம், எவ்வாறு தமிழர்களுக்கு நீதி கோரும்? எனவே, வடக்கு கிழக்கில் இனப்படுகொலை நடந்தது என்பதை அனைத்துலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்ற வேண்டுகோளை விடுத்தார்.

மேலும், கிழக்கில் ஊர்க்காவல் படையினர் என்ற பெயரில் சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து 1990-1991ம் ஆண்டுகளில் ஈழத்தமிழர்களை படுகொலை செய்தமை தொடர்பான விபரங்களை வெளியிட்டுள்ள நாம் தமிழர் சமூக சேவை ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் கோபாலன் பிரசாத், இந்தப் புதைகுழிகள் தோண்டப்பட்டு ஈழத்தமிழர்களுக்கான நீதி கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைத்துள்ளார். அதே வேளை, அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் செயலாளர் அருள் ஜெயந்திரன், யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் நடாத்திய அடையாளப்போராட்டத்தில், உள்ளக தீர்வு முறைகள் ஏற்கப்படாத ஒன்றாகவும், வெளியகத் தீர்வு முறைகள் வலுவிழந்தும் கிடக்கும் இன்றைய சூழலில், பிரித்தானியா தானே தொடக்கி வைத்த ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காண வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையிலும் தவிசாளர் தியாகராசா நிரோஜன், "இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலை; இதற்கு சிறிலங்கா அரசே காரணம். ஆதலால், சிறிலங்கா அரசின் உள்நாட்டு விசாரணைகளில் நாம் நம்பிக்கை இழந்துள்ளோம். இவ் இனப்படுகொலைகளுக்கு அனைத்துலக நீதியே தீர்வைப் பெற்றுத் தரும் என, அறுபதினாயிரம் மக்களின் ஆணையைப் பெற்ற இச்சபை தீர்மானிக்கிறது" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபையிலும் உறுப்பினர் துரைசிங்கம் மதன், தனிநபர் பிரேரணையாக, செம்மணி புதைகுழிகள் தொடர்பாக அனைத்துலக விசாரணையை மாநகரசபை கோருகிறது எனக் கொண்டு வந்த பிரேரணைக்கு, தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 9 உறுப்பினர்களும், சபையில் இருந்த அனைவரும் ஆதரவு அளித்து அதனை நிறைவேற்றியுள்ளனர்.

அதே வேளை, தையிட்டியில் மற்றொரு கட்டிடம் கட்டவும் விகாராதிபதி முயன்றமைக்கு உடனடியாகவே, வலிவடக்கு பிரதேச சபை விளக்கம் கோரியமையும், தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனும், சபை உறுப்பினர்களும் நேரில் தையிட்டி திஸ்ஸ விகாரைக்குச் சென்று நிலம் வெட்டப்பட்டிருப்பதைப் பார்வையிட்டுள்ளனர். கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரமும், யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் நேரடியாகச் சென்று நிலைமையை ஆராய்ந்துள்ளனர். அதே வேளை, வலிவடக்கு பிரதேச சபையின் சார்பில், சட்டவிரோதமான திஸ்ஸ விகாரைக்கு எதிராக, அரச அதிபர் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனை வழக்கறிஞராகக் கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. இவ்விடயத்தில் விகாரை தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரனால் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறு, ஈழத்தமிழர்கள் கட்சி பேதங்களுக்கு அப்பால், பொதுவிடயங்களில் ஒருமைப்பாட்டுடன் செயற்படத் தொடங்கியுள்ளமை ஆரோக்கியமானதாக உள்ளது. இந்நேரத்தில், சிறிலங்காவின் ஜனாதிபதி அநுரகுமர திசநாயக்க மகாசங்கத்தினரைச் சந்தித்து, அவர்களின் தொடர்ச்சியான வழிகாட்டல்களை அரசு எதிர்பார்ப்பதாகவும், தேசிய, மத மற்றும் சமூக மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை பின் வாங்காமல் அரசு செயற்படுத்துவதாகவும், புத்தசாசன செயற்பாட்டுக்கான ஆணையகத்தை அமைக்க ஆணைவழங்கியுள்ளதாகவும் கூறியுள்ளமை, இவ்வரசாங்கமும் பௌத்த சிங்களப் பேரினவாத அரசியல் கொள்கையை மேலும் வளர்க்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

இந்நிலையில், ஈழத்தமிழர் தாயகத்தில் வேகம் பெற்று வரும் நீதிக்கான குரல், ஈழத்தமிழரின் இறைமையை உலகம் ஏற்பதன் வழியாகவே நடைமுறைச் சாத்தியமாகும் என்பதை உணர்ந்து, அனைத்துலகிலும் உள்ள தமிழர்களும் ஒருமைப்பாட்டுடன் பொதுவேலைத்திட்டங்களை அதற்கேற்ப உருவாக்கிச் செயற்பட வேண்டுமென்பதே இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**



# வடக்கு மீனவர்களின் தொடரும் வாழ்வாதாரத்துக்கான போராட்டம்

இலங்கை வடக்குக் கடற்பரப்பில் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இத்தனை வருடங்கள் கழிந்தும் தீராத 'கடல் - அரசியல்' பிரச்சினையாகவே நீண்டுகொண்டிருக்கிறது.

இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்பில் தொடர்ந்து அத்துமீறி நுழைந்து, இழுவைப் படகுகள் மூலமாக தாராளமாக மீன்களை வாரி அள்ளிச் செல்கின்றனர்.

இந்த நிலைமைகள் தொடர்வதால் வடக்கில் வாழும் பாரம்பரிய மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றார்கள். அத்துடன் வடக்கு கடல்வளம் விரைந்து அழிக்கப்படும் நிலைமையும் தொடர்கிறது.



கடந்த வாரம், கூட பத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டமைக்காக மன்னார் கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஜூன், ஜூலையில் மீன் இனப்பெருக்கத்துக்கான ஓய்வுகால நிறைவுக்குப் பின்னர் சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்தி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுகின்ற நிலைமைகள் தீவிரமடைந்து வருகின்றன.

அத்துடன், இதுபற்றி பல பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டாலும் ஒரு தீராப் பிரச்சினையாக தொடர்கதையாகின்ற நிலைமைகளும் நீண்டு கொண்டிருக்கின்றன.

இவ்வாறானநிலையில்தான், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும் இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவும் இடையிலான முக்கியமானதொரு சந்திப்பு நடைபெற்றிருக்கிறது.

அந்த சந்திப்பின் போது, இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக நுழைந்து மீன்பிடிக்கின்றனர் என்பதையும், அதனால் இலங்கை மீனவர்கள் கடும் பாதிப்புக்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதையும் அமைச்சர் நேரடியாகவே குறிப்பிட்டார்.

அமைச்சர் சந்திரசேகர் குறித்த 'உணர்வு பூர்வமான' விடயத்தினை கையிலெடுப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது, வடக்கு மீனவர்களின் அபிமானத்தை பெற்றுக்கொள்வது. இரண்டாவது, இந்தியாவுடன் அவருக்கும், அவரது கட்சிக்கும் காணப்படுகின்ற 'ஒவ்வாமை'.

எது எவ்வாறாக இருந்தாலும், அமைச்சர் சந்திரசேகர், காய்தல், உவத்திலின்றி, தமிழக மீனவர்களின் அத்து மீறல்களால் வடக்கு மீனவர்கள் முகங்கொடுத்துவரும் நெருக்கடிகளை நேரடியாக சுட்டிக்காட்டியமை வரவேற்கப்பட வேண்டியது.

ஆனால், தமிழக மீனவர்களால் ஏற்படும் பாதிப்புக்களை சுட்டிக்காட்டிய அமைச்சர் சந்திரசேகர், மீண்டும் இந்தியாவிடமிருந்து வடக்கு மீனவர்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டுக்கான உதவித்திட்டங்களை கோரியமையும், சீனோர் போன்ற கட்டமைப்புக்களுக்கு உதவியளிக்க கோரியமையும், பருத்தித்துறை உள்ளிட்ட பகுதிகளில் மீனவ துறைமுகங்களை கட்டியெழுப்பும் கோரிக்கையை விடுத்தமையும் 'சரணாகதி' நிலைமையையே வெளிப்படுத்தி இருக்கிறது.

அமைச்சரின் கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணாக இருந்தாலும் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா வழக்கம்போல் இருநாடுகளின் நட்புறவுகளை பேண வேண்டும், ஒரே மொழி பேசும் மீனவர்களுக்கு இடையிலான முரண்பாடுகளை சமாதானமாகத் தீர்க்க வேண்டும் என்ற நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி முடிவுக்கு கொண்டு வந்திருந்தார்.

இலங்கையில் கடமையாற்றும் உயர்ஸ்தானிகருடன் விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர்கள் இவ்வாறான பேச்சுவார்த்தைகளை போரின் பின்னரான கடந்த 16 ஆண்டுகளாக முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் விளைவுகள் எதுவும் நிகழவில்லை. பேச்சுக்கள் வெறும் செய்திகளாக மட்டும் வெளிவந்து மறைந்து விடுகின்றன.

வடக்கு மீனவர்களின் விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத்திலும் தீவிரமான விவாதங்கள் எழுகின்றன. ஆனால் அதற்கும் உருப்படியான பதில்களை ஆட்சியில் உள்ள அரசாங்கங்கள் வழங்கியதாக பதிவுகள் இல்லை.

இத்தகையதொரு நிலையில் கடந்தவாரம், மன்னார் மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மீனவர் பிரச்சினை தொடர்பான இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முக்கியமான கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

'இலங்கை கடற்படையிடம் போதிய ரோந்து கப்பல்கள் இருக்கின்றன, தேவையான ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளும் உள்ளன. ஆனால் இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக நம்முடைய கடற்பரப்பில் மீன் பிடிக்கும்போது அதை தடுப்பதில் ஏன் தோல்வியடைகிறார்கள்?' என்பது தான் அவரது கேள்வி.

**விதுரன்**

அதுமட்டுமன்றி, வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் முழத்துக்கு முழம் முகாம்களை இலங்கைப் படைப்பிரிவுகள் நிறுவியிருக்கின்றன. கடற்படையும் அவ்வாறு தான் முகாம்களை கடற்கரையோரமெங்கும் நிறுவியிருக்கின்றது.

ஆனால் கடற்படையால் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுக்க முடியவில்லை. இது அதன் பலவீனத்தை வெளிப்படுத்துகின்றது. இலங்கை கடற்படையின் இயலுமையை இங்கு கவனத்தில் கொள்வது முக்கியமானது.

போருக்குப் பின்னர் கடற்படை தனது பலத்தை அதிகரித்த போதும், இலங்கையின் கடல் எல்லைகளை பாதுகாப்பதற்கு ஏற்ற வகையில் பலத்தை அதிகரித்திருக்கிறதா என்பதில் கேள்விகள் உள்ளன.



கடற்படையிடம் 6 ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் இருக்கின்றன. இவ்வாறான பெரிய கப்பல்கள் இருந்தாலும் அதிவேகத் தாக்குதல் படகுகள் முக்கியமானவை. அவையே அத்து மீறல்கள் கட்டுப்படுத்தக் கூடியவை. விரைவாக செயற்பட கூடியவையாகவுள்ளன.

தற்போதைய நிலையில் இலங்கை கடற்படையானது சிறிய வகை படகுகளையும் பெரிய வகை ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களையுமே பெருக்கிக் கொண்டிருக்கிறது. நடுத்தர வகையான அதிவேகத் தாக்குதல் படகுகளை அது பலப்படுத்தவில்லை.

ஒரு காலகட்டத்தில் இலங்கை கடற்படையிடம் அதிவேக தாக்குதல் படகுகள் இருந்தன. ஆனால் இப்பொழுது இலங்கை கடற்படையின் அதிகாரபூர்வ தகவல்களின் படி 9 அதிவேகத் தாக்குதல் படகுகள் மட்டுமே உள்ளன. இந்த படகுகள் இல்லாமல் எந்தவொரு கடல்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# “மக்கள் மேலான போரை” 1983 யூலையில் ஈழத்தமிழர்கள் மேல் பிரகடனப்படுத்திய



# சிறிலங்காவே பிரிவினைவாதி பயங்கரவாதி

## சூ.யோ. பற்றிமாகரன்

எதிர் வரும் யூலை 23ம் திகதியுடன் 1978ம் ஆண்டு அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரமுள்ள சிறிலங்காவின் அரசுத்தலைவராக தன்னை வெளிப்படுத்திய ஜே. ஆர்.ஜயவர்த்தனா, ஈழத்தமிழர்கள் மேல் போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என பகைநாடொன்றுடன் போர் பிரகடனம் செய்வது போல் போர்ப்பிரகடனம் செய்து “மக்கள் மேலான போரை” 1983 யூலையில் பிரகடனப்படுத்தி 42 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது.

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரமுள்ள அரசுத் தலைவராக 1978 முதல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரானஜேஆர். ஜயவர்த்தனா, அன்று முதலே தனது அமைச்சர்களுடன் இணைந்து மக்கள் மேலான இந்தப் போருக்கு ஆயத்தம் செய்தார் என்பது வரலாறு.

1979 இல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் சிறிலங்காப் படையினர் தாம் சந்தேகிக்கும் ஈழத்தமிழரைக் கண்ட இடத்தில் சுடவும், சுட்ட இடத்தில் எரிக்கவும் சட்டத்தகுதியை உருவாக்கினார். 11.07.1979 இல் தன்னுடைய மருமகனும் சிறிலங்காவின் பிரிகேடியருமான வீரதுங்காவை யாழ்ப்பாணத்துக்கான இராணுவத் தளபதியாக நியமித்து, அவசரகால நிலையையும் பிறப்பித்தார்.

இதன் விளைவாக, இன்பம் செல்வரத்தினம் என்னும் இரண்டு தமிழ்ச் செயற்பாட்டாளர்களைப் படையினர் கைது செய்து மண்டைதீவு சந்தியில் இனப்படுகொலை செய்து போட்டதோடு, ஆறு தமிழ் இளைஞர்களைக் கைது செய்த பின்னர் உயிரோடு உள்ளனரா இல்லையா என்ற விபரம் இல்லாமல் செய்தனர்.

ஜயவர்த்தனா தனது உறவினரான பிரிகேடியர்கொப்பேகடுவவை1979 டிசம்பருக்குள் யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய அனைத்து அரசியல் விழிப்புணர்வுள்ள இளையவர்களையும் கொன்றழிக்கும் கட்டளையுடன் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார். ஆயினும், அந்த கொன்றழிப்புக் கால எல்லையுள்ள கடிதத்தின் ஒளிப்பிரதியை தமிழீழ விடுதலைப்புலிகள்கவர்ந்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பி வைத்த உத்தியினால், அந்த இனப்படுகொலைத் திட்டத்தை ஜே. ஆர். மாற்றிக் கொண்டார்.

அதே வேளை, அவரின் அமைச்சரான சிறில் மத்தியூ, 1970கள் முதலே ஈழத்தமிழின அழிப்புக்கான பல செயற்திட்டங்களை உருவாக்கி வந்தார். அதில் ஒன்றாக திட்டமிடப்பட்டதுதான் 1983 யூலையில் வாக்காளர் பட்டியலில் இருந்து தயாரித்த இனஅழிப்புக்கான பாதைவரைபுடன், கொழும்பில் வாழ்ந்த ஈழத்தமிழர்களின் வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், அனைத்தையும் கொள்ளையடித்து எரிக்கும் ஈழத்தமிழர் பொருளாதார உட்கட்டுமானங்களை அழிக்கும் திட்டம்.

இதனுடன் சேர்த்து, ஈழத்தமிழரை ஈவிரக்கமின்றி நடுத்தெருவில் பட்டப்பகலில் சிங்களக் கூட்டத்தினர் கூடி உயிருடன் எரித்த கொடூரங்கள். ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் வதிவிடத்துக்கு அண்மையிலேயே சைக்கிளில் சென்ற தமிழரை நிர்வாணமாக்கி பெற்றோல் ஊற்றி எரித்து, அவர் நெருப்பில் துடிக்கையில் கத்திகளால் வெட்டி வெட்டி மகிழ்ந்த கொடுமையைச் செய்தனர். வானில் பயணித்துக் கொண்டிருந்தவர்களை உயிரோடு கொளுத்தி எரித்தமை போன்ற எத்தனையோ கொடூரங்களால் கொழும்பு எரிகாடாக காட்சியளித்தது.

சிறிலங்கா அரசாங்கம் சிறைப்பிடித்து வைத்திருந்த ஈழத்தமிழர்களின் செயற்பாட்டாளர்கள் 53 பேரைச் சிறையினுள்ளேயே இனப்படுகொலை செய்த வரலாறும் பதிவாகியது. இந்தச் சிங்கள பயங்கரவாதிகள் பயணிப்பதற்கான வாகனங்கள், எரிப்பதற்கான எரிபொருட்கள் அனைத்தும் அரசாங்க வாகனங்களாகவும், அரசாங்க எண்ணெய்க்கு தங்களில் இருந்து வழங்கப்பட்டதாகவும் அமைந்தது, எவ்வளவு தூரத்துக்கு யூலை ஈழத்தமிழர் இனஅழிப்பை ஜே. ஆரும் அவருடைய அமைச்சர்களும் திட்டமிட்டு நிறைவேற்றினர் என்பதற்கான சான்றுகளாயின.

இந்த மக்கள் மேலான போரின் ஒரு அங்கமாகவே, 6வது அரசியல் சட்டத்தை ஜே. ஆர். உருவாக்கி, ஒரு கட்சி ஆட்சி முறையுள்ள நாடாக இலங்கையை மாற்றினார் என்பது அனைத்துலக ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. அந்த வகையில், ஜே. ஆர். தலைமையிலான சிறிலங்காவே இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வந்த ஈழத்தமிழர்களிடம் இருந்து சிங்கள நாடாகச் சிறிலங்காவை பிரிவினை செய்தார் என்பது வரலாறு. ஆனால், அன்றிலிருந்து இன்று வரை, சிறிலங்காவும் அதன் ஆதரவு வல்லாண்மைகளும் மேலாண்மைகளும், ஈழத்தமிழர்களின் இருப்பைப் பாதுகாக்க முயன்ற தமிழீழ விடுதலைப் புலிகளையே பிரிவினைகோரினார்கள் என வரலாற்றுத் திரிபு செய்து வருகின்றனர்.

அவ்வாறே பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்களை இனஅழிப்பு செய்து, ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஈழத்தமிழர்களை 27 அகதி முகாம்களில் புகலிடம் பெற வைத்து, இலங்கை முழுவதும் தமிழர்களை இனஅழிப்பு செய்த இந்த சிறிலங்காவின் மக்கள் மேலான போரின் பயங்கரவாதத்துக்கு எதிர் விளைவாக, ஈழத்தமிழர்களின் தேசியப் பாதுகாப்புக்குப் பொறுப்பாக மக்கள் போராட்டம் என்னும் கொரில்லா போர்முறை வழி இருந்த தமிழீழ விடுதலைப்புலிகள், மரபுவழிப் படையாகச் சீருடை அணிந்த முப்படைகளையும் உருவாக்கிய வரலாற்று நிகழ்வு உள்ளது. இதனையும் சிறிலங்காவும் அதன் ஆதரவு நாடுகளும் தமிழீழ விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் என வரலாற்றுத் திரிபு செய்து உண்மையை மறைத்து வருகின்றனர்.

1983 சிறிலங்காவின் ஆடி இனஅழிப்பின் பொருளாதார இழப்பு பெறுமதி 29 மில்லியன் அமெரிக்க டொலர்கள். ஆனால், 1983 ஜனவரி முதல் யூலை வரை, சிறிலங்கா படைகள் ஈழத்தமிழர்களின் தாயகமாகிய இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்திய பொருளாதார இழப்பு 706 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

அதே நேரத்தில், யூலை 1983க்குப் பின்னர் 1988 டிசம்பர் வரை, வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் சிறிலங்காப் படைகள் ஏற்படுத்திய பொருளாதார இழப்பு 385 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இந்தப் புள்ளி விபரங்களை ஜோன் எம். ரிச்சர்ட்சன் மற்றும் எஸ். டபிள்யூ. ஆர். தி. ஏ. சமரசிங்க இணைந்து வெளியிட்ட “சிறிலங்காவின் இனமுரண்பாட்டின் பொருளாதார பரிணாமத்தை அளவிடல்” என்ற ஆய்வுக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

இவை சிறிலங்காவின் மைய நோக்கம், ஈழத்தமிழர்களின்அனைத்து உட்கட்டுமானங்களையும் உயிர்வாழ்தலையும் அழிக்கும் நோக்கம் என்பதைத் தெளிவாக்குகிறது. இதனை உறுதிப்படுத்தும் ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் வாய்மொழிச் சான்றாக, இலண்டனின் டெய்லி டெலிகிராப்புக்கு 11.07.1983இல் ஜே. ஆர். அளித்த பேட்டியில் அவர் கூறிய, “நான் தமிழர்களின் அபிப்பிராயம் குறித்து கவலைப்பட மாட்டேன். எங்களுக்கு இப்பொழுது அவர்களை நினைக்க முடியாது.

அவர்களது உயிரையோ அவர்களது கருத்துக்களோ குறித்து எங்களுக்கு அக்கறையில்லை. எவ்வளவுக்கு வடக்கில் அழுத்தங்களை ஏற்படுத்துகின்றோமோ, அவ்வளவுக்கு இங்கு சிங்கள மக்கள் மகிழ்ச்சி அடைவர். உண்மையில், நான் தமிழர்களைப் பட்டினி போட்டால் சிங்கள மக்கள் மகிழ்ச்சி அடைவர்” என்ற அவரின் வார்த்தைகள் உள்ளன. இவ்விடத்தில், 1979இல் ஜே. ஆரால் அரசியலுக்குக் கொண்டுவரப்பட்ட அவரின் மருமகன் ரணில் விக்கிரமசிங்காவும் அல் ஜசீராவில் கடந்த ஆண்டுப் பேட்டியில், “ஈழத்தமிழர்களுக்கு பலஸ்தீனியர்களுக்கு நாடுகள் ஆதரவாக இருப்பது போல இல்லை; இதனால் நாங்கள் பலஸ்தீன மக்களை ஆதரிப்பது போல ஆதரிக்க மாட்டோம்” என்று கூறியதை நினைத்துப் பார்க்கையில், சிங்களத் தலைமை என்றுமே பிரிவினையாளராகவும் பயங்கரவாதிகளாகவுமே தொடர்வர் என்பது உறுதியாகிறது.

இதனை அனைத்துலகிலும் வாழும் ஈழத் தமிழர்கள் உலக மக்களுக்குத் தெளிவுபடுத்தி, யார் உண்மையான பிரிவினைவாதிகள், யார் பயங்கரவாதிகள் என்பதை அவர்கள் தெளிவு பெறச் செய்ய வேண்டும்.

• • •

# செம்மணி மனித புதை குழி :



# உள் நாட்டு விசாரணையில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை



**யாழ்ப்பாணம் செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. மேலும் எதிர்வரும் 21ஆம் திகதி அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரையில் 65 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், இலங்கையின் மூத்த சட்டவாளர் கே.எஸ். ரட்ணவேல் அவர்கள் இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய சிறப்பு கருத்து.**

## பகுதி 2 (இறுதிப்பகுதி)

தமிழருக்கான நியாயமான அரசியல் தீர்வு சர்வதேசத்திடமிருந்துதான் கிடைக்க வேண்டும்

பூகோள அரசியல் நிலைமை என்பது எப்போதும் நிலையான ஒன்றல்ல. அது நாடுகளில் அரசாங்கங்கள் மாறும்போது அவைகளும் மாறுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.



முன்பு ஒரு காலத்தில் இந்திரா காந்தி போன்றவர்கள் அதிகாரத்தில் இருந்த நேரத்தில் இந்தியா ஒரு ஆதரவை வழங்கிக் கொண்டிருந்தது. ஆனால் உள்நாட்டு, இந்தியா மற்றும் சர்வதேச மாற்றங்களின் விளைவாக நிலைமை மாறிவந்தது.

திரும்ப அது அதே நிலைக்குச் செல்லாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. பழைய நிலைக்கு வரலாம் அல்லது வேறு பல விடயங்களைக் கையாள வேண்டிய நிலைமை ஏற்படலாம். எனவே, பூகோள அரசியல் தன்மை என்பது ஒரு நிலையான அம்சம் அல்ல.

அந்தச் சந்தர்ப்பம் வரும்போது எங்களுடைய விடயங்களைக் கவனமாகக் கையாள்வதும் அந்தத் தருணங்களைப் பயன்படுத்துவதும் மிகவும் இன்றியமையாதவை. இதற்கான விட யங்களை எங்களுடைய அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். கடந்த மாதம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வருகை தந்தார். அவரிடம் செம்மணிக்குச் செல்லலாம் என அரசாங்கம் கூறியது. ஆனால் செம்மணி மனிதப் புதைகுழிக்குச் செல்வதற்கு முன் சாதாரண அனுமதி பெற வேண்டும்.



எனவே யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் தான் அதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அதன் கீழ்தான் செயற்பட வேண்டும். எந்த நடவடிக்கை நடந்தாலும் நீதிமன்ற அனுமதி பெற வேண்டும்..

ஆனால் அந்த நீதிமன்ற அனுமதி பெறுவதற்குக்காணாமல்ஆக்கப்பட்டவர்களின்விடயங்களைக் கையாளும் அமைப்பான OMP இருக்கிறது. அவர்கள்தான் அந்த அனுமதி பெறுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம்.

ஆனால் OMP-யை வெளிவிவகார அமைச்சும் நீதி அமைச்சும் தடுத்துவிட்டனர். தாங்கள் சட்டமா அதிபர் வழியாக அனுமதியைப் பெற்றுக்கொடுப்பதாகக் கூறினார்கள். ஆனால் எங்களுக்குத் தெரியும் அது நடக்காது என்று. அதனால் கடைசி நிமிடத்தில் பாதிக்கப்பட்டவர் சார்பாக ஒரு மனுவைச் சமர்ப்பித்தோம்.

இந்த வழக்கின் போது, 'ஐ.நா ஆணையாளர் அவர்கள் வரலாம், ஆனால் செம்மணி பகுதிக்குள் வர முடியாது. அந்தப் பகுதிக்கு வெளியில் இருந்துதான் பார்க்க வேண்டும்' என காவல்துறை உயர் அதிகாரி கூறினார்.

ஆனால் எமது தரப்பில், இலங்கை அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகள் சபை கொழும்பு அலுவலகத்திற்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று வந்திருக்கிறது. அவரை செம்மணிக்குள் அனுமதிக்காவிட்டால் அது ஒரு பெரிய குழப்பத்தில் முடியும்.

ஏனென்றால் அவர் ஒரு உயர்மட்ட ராஜதந்திர அதிகாரி. அவருக்கு ஒரு நாட்டின் தலைவருக்குரிய அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவரை ஒரு பகுதிக்குள் அனுமதிக்காமல் வெளியில் நிற்க வைப்பது அவரை அவமதிப்பதாக அமையும். எனவே நிச்சயமாக அவர் அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறி நீதிமன்றத்திற்கு எடுத்துக்கூறினோம். அதன் பிறகு நீதிமன்றம் அனுமதித்தது.

ஆக, கடைசி வரைக்கும் இந்த அரசாங்கம் ஐ.நா ஆணையாளரை செம்மணி பகுதிக்குள் விடுவதற்குத் தயாராக இருக்கவில்லை. நெருக்கடிகளை ஏற்படுத்திக்கொண்டே இருந்தார்கள்.

இதை எதற்காக நான் சொல்கிறேன் என்றால், எந்த அரசாங்கம் வந்தாலும் தமிழர்கள் குறித்த அரசியல் தீர்வில் ஒரு ஆர்வம் இல்லை.

அப்படிப்பட்ட ஒரு ஆர்வம் இருந்தாலும் உள்ளுக்குள்ளே இருக்கும் அதிகார சக்திகள் இவர்களை விடவே மாட்டார்கள். அந்த அதிகார சக்திகள் என்றால் இராணுவம், மற்றது பௌத்தம் - இவை இரண்டும் சேர்ந்துதான் அரசாங்கத்தை இயக்கிக்கொண்டிருக்கின்றன.



எனவே இராணுவம், பௌத்தம் ஆகிய இரண்டையும் மீறி அரசாங்கத்தால் செயல்பட முடியாது. அப்படிச் செயல்பட்டாலும் ஒரு நியாயமான விடயங்களைக் கையாள வைப்பதற்கு ஒரு பலமிக்க அரசியல் தலைமை, நியாயமான அரசியல் தலைமை இதுவரைக்கும் இந்த நாட்டில் இருந்ததில்லை.

இந்த நிலையில்தான் காலங்காலமாக இனக்கலவரங்கள் மூலமாக தமிழர்களை அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே எங்களுக்கு நியாயமான நீதி கிடைக்க வேண்டும் என்றால் அது சர்வதேசத்திடமிருந்துதான் வரவேண்டும்.

• • •



# “கறுப்பு யூலை” ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாச இருவரின் கூட்டுச்சதி!

பா. அரியநேத்திரன்

இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக தேர்வானவர், ஐக்கியதேசியக் கட்சி அரசின் ஜே. ஆர். ஜெயவர்தன. இவர் 1978 பெப்ரவரி 04 முதல் 1989 ஜனவரி 02 வரை பதவியில் இருந்தார். அவருக்குத் துணையாக, தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவின் தந்தையான ரணசிங்க பிரேமதாசா, பிரதமராக செயல்பட்டார்.

இருவரின் கூட்டுச்சதி ஆட்சியில்தான் 1983 யூலை மாதத்தில் நடந்த இனப்படுகொலையே “கறுப்பு யூலை” என அழைக்கப்படுகிறது.



கறுப்பு யூலைக்கு இன்று (2025 யூலை) 42 ஆண்டுகள் ஆகின்றன. இலங்கையில் 1983 யூலை 23ம் திகதி தொடக்கம் யூலை30ம்திகதிவரையானஎட்டுநாட்கள்தொடராக தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இனப்படுகொலையையே இது.

1983 யூலை 23 சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில், தமிழீழ விடுதலைப் புலிகள், யாழ் நகருக்கு அருகிலுள்ள திருநெல்வேலியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத் தொடரணியை பதுங்கியிருந்து தாக்கினர். அந்த தாக்குதலில் ஒரு அதிகாரியும் பன்னிரண்டு இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

1983 யூலை 24, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை, பலாலி இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர், திருநெல்வேலி செல்லும் வழியில் உள்ள அனைத்துக் கடைகளையும் அடித்து நொறுக்கினர். யாழ்ப்பாணத்தில் 51 தமிழ் பொதுமக்கள், பின்னர் பழிவாங்கும் நோக்கத்தில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.

இறந்த இராணுவத்தினரின் 13 சடலங்களையும் இறுதிச் சடங்குகளுக்காக யாழ்ப்பாணத்திலிருந்துழும்பிலுள்ள பொரளைகனத்தை இடுகாட்டில்கொண்டு செல்லப்பட்டது. யூலை 24 மாலை 5 மணிக்கு நடைபெறவிருந்த அந்த இறுதிச்சடங்கில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அமைச்சரவை உறுப்பினர்கள் கலந்து கொள்ள விருந்தனர்.

பிரதமர் ரணசிங்க பிரேமதாசாவின் நம்பிக்கைக்குரிய அடியாளான சிறில் மத்தியூ, கொழும்பு நகர முதல்வரின் அடியாட்கள், மாநகர சபைப் பணியாளர்கள், போக்குவரத்து அமைச்சர் எம். எச். முகம்மட் அவர்களின் அடியாட்கள், மாவட்ட அமைச்சர் வீரசிங்கமல்லிமாராச்சி அவர்களின் அடியாட்கள், துணை அமைச்சர் அனுர பஸ்தியான் அவர்களின் அடியாட்கள் — எல்லோரும் இணைந்து தமிழர்கள்மீது தாக்குதல் நடத்தினர்.

இனப்படுகொலையின் உச்சமாக வெலிக்கடை சிறை படுகொலைஇரண்டு நாட்களாக அரங்கேறியது.போராளிகளான தங்கத்துரை மற்றும் குட்டிமணி, 1981 ஏப்ரல் 05ஆம் திகதி தமிழ்நாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற நிலையில், வடமாராட்சி மணற்காடு கடற்கரையில் வைத்து இருவரும் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவர்களுடன் ஏற்கனவே சிறையில் இருந்த பல தமிழ் அரசியல் கைதிகள் இலக்காகக் கொண்டு, 1983 யூலை 25ஆம் திகதி, சக சிங்களக் காடையர்கள் ஆகிய கைதிகளால் குட்டிமணி, தங்கத்துரை உட்பட 35 தமிழர்கள் வாள்களினாலும், பொல்லுகளினாலும் குத்திக் கொல்லப்பட்டனர்.

இரண்டாவது தடவையாக, மீண்டும் இரண்டு நாட்களுக்குப் பிறகு, 1983 யூலை 28ஆம் திகதி, 18 தமிழ் கைதிகள் வெட்டிக் கொல்லப்பட்டனர்.மொத்தமாக 53 தமிழ் அரசியல் கைதிகள் இனப்படு கொலை செய்யப்பட்டனர்.

ஒரு சிறைச்சாலையில் இரண்டு தடவைகள் தமிழர்களை படுகொலை செய்து சாதனை புரிந்தவர்கள் இனப்படுகொலையாளர்களான இலங்கை ஜனாதிபதிஜே. ஆர். ஜெயவர்தன மற்றும் இலங்கை பிரதமர் ரணசிங்க பிரேமதாசா என்பது உண்மை. அவர்கள் இருவரின் நெறியாள்கையில் இடம்பெற்ற கூட்டுத் தயாரிப்பே1983 கறுப்பு யூலை என்பதை அனைவரும்புரிந்துகொள்ள வேண்டும்.



சிங்களக்குண்டர்களை ஏவி, கம்பிகள், சமையலறைக் கத்திகளுடன் ஆயுதம் ஏந்திய கும்பல்கள் தெருக்களில் சுற்றித்திரிந்து, தமிழர்களைத் தாக்கிக் கொன்றனர்தமிழர்களுடைய இரத்தம் தென்பகுதி முழுவதும் நனைந்தது.

யாழ்ப்பாணத் தமிழர் பெருமளவு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்

சிரேஷ்ட சட்டத்தரணி ஐங்கரன் குகதாதன்



**இலங்கையில் மிகவும் பேசுபொருளாகியுள்ள சட்டமாக பயங்கரவாத தடைச் சட்டம் காணப்படுகிறது. இதனை நீக்க வேண்டும் என்பது பலரது கோசமாகவே உள்ளது. வடகிழக்கின் பல இடங்களில் இதை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு பல போராட்டங்கள் நடத்தப்பட்டதுடன், தற்போது கூட தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.**

**இதன் காரணமாக அப்பாவி பொதுமக்கள் உட்பட பலர் பாதிக்கப்பட்டு சிறை வாழ்க்கையை அனுபவித்துள்ளனர். பலர் இன்னும் அனுபவித்து வருகின்றனர். எனவே, இச் சட்டம் கொடூரமானதென்பதை பலரும் வலியுறுத்தி வருகின்றனர். இதனைச் சார்ந்தாக, சிரேஷ்ட சட்டத்தரணி ஐங்கரன் குகதாசன் விளக்குகிறார்:**

**கேள்வி:**
**பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பிலான தங்களின் கருத்து?**

**பதில்:**
சர்வதேச சட்டங்கள், மனித உரிமை தராதரங்கள், விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டுப் பார்க்கும்போது, 1979-ல் உருவாக்கப்பட்ட தற்காலிக ஏற்பாடுகளின் அடிப்படையில் இயங்கும் பயங்கரவாத தடைச் சட்டம் (PTA) சர்வதேச மனித உரிமை கோட்பாடுகளை மீறுகின்றது.

அதனால் இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும்.

பலரது கவலையாக "இந்தச் சட்டம் இல்லையெனில் என்ன செய்வது?" என்ற கேள்வி எழுகிறது. ஆனால், 2019-ல் நிகழ்ந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் போன்ற பயங்கரவாதச் சம்பவங் களை, இச் சட்டம் தடுப்பதில் தோல்வியடைந்தது.



இப்போதைய PTA எந்த தேவைக்கும் பயன்படவில்லை. மாறாக, இது மிகுந்த மனித உரிமை மீறல்களை ஏற்படுத்தும் சட்டமாகவே உள்ளது.

எனவே தற்போதைய பயங்கரவாத தடைச் சட்டம் (PTA) நீக்கப்பட வேண்டும்.

**கேள்வி:**
**பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான கைது விசாரணைகள் தொடர்பாக?**

**பதில்:**
கைது செய்யப்படுகின்ற போது காவல் துறையினர் பயங்கரவாத தடைச் சட்டம் அல்லாத விடயங்களை வைத்தும் கைது செய்யலாம். உதாரணமாக பிள்ளையானை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள். பல்கலைக்கழக விரிவுரையாளரை கடத்தி கொலை செய்தமைக்காக. ஆனாலும் ஆட்கடத்தல் கொலை என்பது சாதாரண தண்டனைச் சட்டக் கோவையில் உள்ளது.

பிள்ளையானை கடந்த விடுதலைபுலிகளின் உறுப்பினர் என்ற வகையில் தான் கைது செய்துள்ளார்கள். சாதாரண சட்டத்துக்கு வருகின்ற குற்றங்களைக் கூட பயங்கரவாத தடைச் சட்டங்களை வைத்து கைது செய்கிறார்கள். ஏனெனில் சட்டத்தில் பயங்கரவாத சட்டம் குறுகிய சரியான முறையில் தெளிவாக சொல்லப் படவில்லை. சட்டங்களை உருவாக்கும் போது அடிப்படை கோட்பாடு என்னவெனில் அந்த சட்டம் என்ன நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ அந்த அடிப்படையில் அதன் சொற்கள் ஒவ்வொன்றாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

சந்தேகத்துக்கோ அல்லது மாற்று விதமான முறையிலோ மயக்க நிலைகளை கொண்டிருக்கின்ற நிலையில் சட்டங்கள் இருக்கக் கூடாது. இது தான் சட்டத்தின் கோட்பாடாகும். பயங்கரவாத சொல் சரியாக கூறப்படவில்லை. முறை தவறி பயன்படுத்துவதை கண்டுள்ளேன். இதன் மூலம் கைதாகினால் ஒரு வருடம் வரைக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கு கீழ் அமைச்சர் கையொப்பமிட்டு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கலாம். வழக்குக்கு முன் சந்தேகத்தின் பேரில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கையொப்பமிட்டு மேற்கொள்ளலாம் .கைது என்பதும் தடுத்து வைப்பதும் நீதிமன்ற பொறி முறைகள் ஊடாக செல்ல வேண்டும். ஆனால் இந்த பொறுப்பு அமைச்சருக்கு கொடுக்கப்பட்ட காரணத்தால் நீதிமன்ற பொறி முறையின் வெளியில் சென்று நிருவாக பொறி முறைகள் ஊடாக செல்கின்றது.



இவ்வாறான நிலையில் கேள்விக்குட்படுத்தும் வாய்ப்பு கிடையாது. இதனால் நிருவாக துறையை தடுத்துவைப்பதை உறுதிப்படுத்துகின்றது. எத் தனையோபேர் போதுமான ஆதாரங்கள் இன்றிபயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுகிறார்கள். நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுபிறகு ஆதாரங்கள் இன்றி பிணையில் விடுவிக்கப்படுகின்ற தன்மையும் காணப் படுகிறது.

அண்மையில் கைதான முஹம்மட் சுகைல் என்பவரின் வழக்கு விசாரணையும் இதனையே சொல்கிறது. இச் சட்டத்தில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. சாதாரணமாக கொலை செய்யப்பட்ட வழக்கில் வேறு எந்தவிதமான ஆதாரங்களோ சாட்சியங்களோ இல்லாத பட்சத்தில் உரிய நபர் குற்றத்தை ஒத்துக் கொண்டு எழுத்து மூலமாக வழங்கினால் கூட போதிய ஆதாரங்கள் இன்றி வழக்கு தொடர முடியாது. ஆனால் இங்கு வந்து குற்ற ஒப்புதல் மூலம் குற்றவாளியாக அடையாளம் காண முடியும்.

தடுப்பு உத்தரவு மூலம் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டால் அதாவது நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு சித்திர வதை இன்றி 14 நாட்கள் ஆகக் கூடுதலாக தடுத்து வைக்கலாம்.அதற்கு மேல் தடுத்து வைப்பதாயின் நீதவானிடம் முற்படுத்தி தடுத்து வைக்க வேண்டும். இது எதற்காக என்றால், காவல்துறையினுடைய தடுப்புக் காவலில் இருக்கும் போது சித்திரவதை இடம்பெறவில்லைஎன்பதைஉறுதிப்படுத்துவதற்காக. ஆனால் இங்கு மூன்று மாதங்களில் அதிக சித்திரவதை இடம் பெறலாம். இது ஒரு வருடத்துக்கு நீடிக்கப்படலாம்.




குற்ற ஒப்புதல் மூலமான வழக்கானது குறித்த நபர் எழுதிக் கொடுப்பதன் மூலமும் வெறு தாளில் கையொப்பமிட்டுகாவல்துறையினர் அதனை எழுதிக்கொள்ளும் சந்தர்ப்பமும் காணப்படுகிறது. எனது அனுபவத்தின் போது நான் கண்டது வாக்கு மூலத்தின் இடையில் கையொப்பம் காணப்பட்டது. கையொப்பத்தை பெற்று வேறு ஒருவர் மூலமாக குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் எழுதப்பட்டுள்ளது. இந்த சட்டம் மூலமாக பிணை வழங்க வாய்ப்பு இல்லை. உயர் நீதிமன்றத்தில் தான் இதனை மேற்கொள்ள முடியும். கீழ் நீதிமன்றத்தில் பிணை வழங்க முடியாது. பிணை மறுக்க கூடிய வாய்ப்பும் காணப்படுகிறது. குறிப்பாக இதற்கு பிடியாணை தேவையில்லை. எனவே தான் பயங்கரவாத தடை சட்டம் மிக மோசமான சட்டமாக காணப்படுகிறது.

**கேள்வி:**
**இந்த சட்டத்தை நீக்குவது பற்றி தங்களின் கருத்து என்ன?**

**பதில்:**
பயங்கரவாத தடை சட்டம் மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதால் பலமட்டங்களிலும் பல தரப்புக்களிலும் உள்ளூர் தேசிய மட்டங்களிலும் சர்வதேச அரங்கிலும் நீக்கப்பட வேண்டும் என கூறுகிறார்கள். இதனால் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதில் எந்த வித மாற்றுக் கருத்தும் இல்லை.

• • •

கட்டுரை

# அரசுகளுடனான உறவுகளும், ஈழத் தமிழர் போராட்டமும்

## பகுதி 2 (இறுதிப் பகுதி)

மு. திருநாவுக்கரசு

“வெற்றி.”... “வெற்றி”... “வெற்றி” – இதுவே அதன் மூல உச்சாடனமும், ஒரே இலக்கும். அதிகாரத்தை உயர்ந்த நிலையில் வைத்துக் கொண்டு, எதிரியை அணைத்து வெற்றி பெற வேண்டுமோ, அவ்வாறு வெற்றி பெறுவது அதன் முதல் முயற்சி. அந்த வழி சாத்தியமில்லையெனில், எதிரியை அடித்து வீழ்த்தி வெற்றியீட்டி இலக்கை அடையும். அது தனது நலனுக்காக, தனது வெற்றிக்காக எதையும் பலியிடத் தயங்காது.



ஹிட்லரின் நாசிச ஜெர்மன் அரசும், தூய ஆரியவாத இலட்சியத்தை முன்வைத்து, தன் மேல் சொந்த இனமக்களையும் மனித குலத்தையும் பலியிட்டது. அதற்கு “தேசபக்தி”, “தியாகம்”, “அர்ப்பணிப்பு” என்றும் புனிதமாக பெயர் சூட்டுவார்கள்; அவற்றை ஆவாகனப் படுத்துவார்கள்.

அரசு இயந்திரம் ஆடை அணிவதில்லை; ஆதலால் அதற்கு வெட்கமில்லை. அரசு இயந்திரத்திற்கு இதயம் இல்லை; ஆதலால் அதற்கு இரக்கமும் இல்லை. அதற்கு ஒன்றே ஒன்று உண்டு – அது அதற்கான நலன். அந்த நலனின் அடிப்படையிலான தேவைகள், தேவையை நிறைவேற்றுவதற்கான வழிவகைகள், அந்த வழிவகைகளை “நியாயம்” என்று புனிதப்படுத்தும் மாந்திரீக வித்தை.



அதன்படி, தமது தேவைகளை “நீதி” என்றும், தேவைகளை அடைவதற்கான வழிவகைகளை “நியாயம்” என்றும் போற்றி முன்னெடுப்பார்கள். அதாவது, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை சிங்கள அரசும், அது சார்ந்த நிறுவனங்களும், கட்சிகளும், ஆட்சியாளர்களும் எவ்வித வெட்கமும், கூச்சமும், தயக்கமுமின்றி நியாயப்படுத்தும் மாந்திரீக உச்சாடனங்களைச் செய்வது போல.

அரசு என்பது வெட்டும், கொத்தும், குத்தும், கொல்லும், சிறை வைக்கும் உபகரணங்களாலான ஓர் ஒடுக்குமுறை இயந்திரம். அதிகாரத்திற்கான அணிகலன்களாக இரத்த உறவு, இரத்த பாசம் போன்ற அணிகலன்களை அது அணிந்திருந்தாலும், இயல்பில் அது இரத்தம் குடிக்கும் ஓர் இயந்திரமாகும்.

அதிகார வேட்கை வந்துவிட்டால், தாய்–பிள்ளை, தந்தை–மகன், அண்ணன்–தம்பி, சகோதரன்–சகோதரி, மச்சான்–மாமன் என்ற அனைத்து வகை இரத்த பாசங்களையும் கடந்து, அது இரத்தம் குடிக்கும். இயல்பில், அது இரத்தம் குடிக்கும் அரசியல் இயந்திரம்.

கடதாசிப் பூச் சோடனையால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஆனால் அந்தக் கடதாசிப் பூச் சோடனைக்குள், குத்தும், வெட்டும் கூரிய கருவிகளும், நச்சுக் குவளைகளும் இருக்கும்.



ஆதலால், அரசை அதற்கே உரிய இயல்பிற்கூடாக, மொழி, மத, இன பந்த பாசங்களையும் கடந்து, அதிகாரத்தை உயிர்மூச்சாகக் கொண்ட ஓர் இயந்திரமாகப் பார்க்கவேண்டும்.

அரசு, கொடைகளைப்பற்றியும், தானங்களைப் பற்றியும்,தர்மங்களைப் பற்றியும் பேசலாம். அவை கூட, அதிகாரத்திற்கான மூலாம்களே தவிர வேறில்லை.

தன்னரசோ, அயலரசோ, பிற அரசுகளோ, தங்கக் குவளைகளில் பாலை வார்த்து தாம் பாளங்களில் பரிவுடன் நீட்டும் என்று ஒரு போதும் நினைக்கவோ, பார்க்கவோ கூடாது. அரசுகள், அரச நலன் சார்ந்து, தத்தம் தேவைகளுக்கும், தாம் முகங்கொடுக்கும் நெருக்கடிகளுக்கும் ஏற்ப தற்காப்புடன் செயல்படும்.

இதனைப் புரிந்து கொண்டால், எந்த ஒரு அரசிடமும் எவரும் தானதர்மக் கண்கொண்டோ,



கொடை வள்ளல் நினைப்புடனோ, எதனையும் எதிர்பார்க்காது, யதார்த்தத்தின் பின்னணியிலான யதார்த்த நிர்ணயக் கண்கொண்டு, நடைமுறைக்குச் சாத்தியமான முன்னெடுப்புகளை மேற்கொள்ள முடியும்.

இவ்விடயத்தில் ஜனநாயக அரசுகள், சோசலிச அரசுகள், மததர்ம புனித அரசுகள் என அனைத்துமே ஒரே மாதிரியானவை. மேற்படி அனைத்து வகை அரசுகளிடமும், தத்தம் நலன்சார்ந்த ஒரே ஒரு இலட்சிய வெட்டும் வாள்களும், குத்தும் ஈட்டிகளுமே உண்டு.

ஆதலால், எல்லா வகைத் தர்மங்களுக்கும் அப்பால், அவரவர் நலன்சார்ந்த ‘யதார்த்தம்’ என்ற ஒரேயொரு அளவுகோலால், நடைமுறைக்குப் பொருத்தமான வகையில், தனக்குத் தேவையான பகுதிகளை அளந்து துண்டுப் போட்டு எடுக்க வேண்டும்.

மேற்படி இவ்வாறு காணப்படும் அரசு சார் உண்மைகளையும், யதார்த்தங்களையும் தமக்குப் பொருத்தமாக அணுகத் தெரியாமல், “அந்த அரசு ஏமாற்றிவிட்டது”, “இந்த அரசு துரோகம் செய்துவிட்டது” என்று ஒப்பாரி வைப்பதில் அர்த்தமில்லை.

நெருப்பு என்றால் சுடும்; சிங்கம் என்றால் அது பசுவைக் கொன்று தின்னும்; புலி என்றால் அது பசித்தாலும் புல்லுத் தின்னாது. சிங்கத்துக்கு மான் பூமாலை போட்டுப் பொற்கிண்ணத்தில்பால் வார்த்து விருந்து வைத்தாலும்,சிங்கத்துக்கு விருந்து மானே; பாலும், பூமாலையுமல்ல.



ஆதலால், இவ்வாறு அரசியலில் அதனை அதுவாக அணுக வேண்டுமே தவிர, மனோரஞ்சன தூய கற்பனாவாத மந்த புத்திகளால் அல்ல.

இன அழிப்புவாத அரசு, எல்லா புண்ணியங்களையும் கடந்து இன அழிப்பைச் செய்யும்.. தர்ம உபதேசம் அதற்கு பொருந்தாது மாறாக, அந்த அரசிடம் இருந்துதப்பி தற்காப்பதற்கான திறனே தேவை. நீதி, புனிதம் என்பனவற்றின் பேரிலான ஒப்பாரியல்ல.

புலிக்கு இலட்சியம் – மாமிசம். புலிக்குப்பலம்–அதன்பல், நகம், வேட்டைத்திறன். மானுக்குப் பலம் – பாய்ந்து நீண்ட தூரம் ஓடவல்ல கால்கள், அதன் உடல்வாகு ஆகும்.

புலி, மானைவிட வேகமாக 100மீட்டர் தொலைவுக்கு மட்டுமே ஓடும் ஆனால் மானோ, குறையாத ஒரே அளவு வேகத்தில் நான்கு கிலோ மீட்டர் வரை ஓடும்.அப்படி என்றால், மானுக்கு சவால் – 100 மீட்டர் வரை தாக்குப்பிடிப்பதுதான்.

இயல்பில் புலிக்கொருபலமிருக்கும். அதைப் போன்று, மானுக்கும் இன்னொரு பலமுண்டு. தத்தம் பலத்தையறிந்து அதனைப் பயன்படுத்துவதுதான்புத்திசாலித்தனம், சாதுரியம், வீரம். தன் பலம் அறிந்தவனே வீரத் தீரசூரன். அவனே உண்மையில் சான்றோனாவான்.



“உன்னையே நீ அறிவாயாக” என்கின்ற தத்துவம் இதைத்தான் சொல்கிறது. இதனைச் சோக்ரடீஸ் கூறியதாகப் பலரும் தவறாகச் சொல்கிறார்கள்சோக்ரடீசுக்கு முன்னமே, கிரேக்க அப்பல்லோ தேவதையின் ஆலயத்தில் இந்த வசனம் எழுதப்பட்டுள்ளது. சோக்ரடீஸ், இதற்கு உன்னதமான வியாக்கியானம் அளித்ததன் மூலம், இதன் உரிமையாளராகக் கூறப்படுகிறார்.

இந்த வாக்கியத்தைக்கூறியவர் யார் என்றே தெரியாது.இது மிகவும் மகத்துவமானதொரு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மலையக மக்களை ஏமாற்றிய அரசாங்கம்

பொருளாதாரம் உட்பட இலங்கையின் வளர்ச்சிக்காக தொடர்ந்தும் பங்காற்றி வரும் மலையக பெருந்தோட்ட மக்கள், அரசியல்வாதிகளிடம் தொடர்ச்சியாக ஏமாற்றமடைவது வாடிக்கையே. அந்தபட்டியலில் தற்போதைய தேசியமக்கள் சக்தி அரசாங்கமும் விதிவிலக்கல்ல என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது. உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக தங்களை நம்பி வாக்களித்த மக்களை புறந்தள்ளியுள்ளது தேசிய மக்கள் சக்தி.



ஊழலற்ற அரசாங்கம், ஊழல் குற்றச்சாட்டுக்களை கொண்ட அரசியல் கட்சிகளுடன் கூட்டணி இல்லை, போன்ற பல்வேறு வாக்குறுதிகளுடன் ஆட்சியை கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தன்னுடைய அரசியல் அபிலாசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக அத்தகைய வாக்குறுதிகளை புறந்தள்ளி செயற்பட்டிருக்கிறது. மலையகத்தில் பிரதான அரசியல் கட்சியாக விளங்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டிருந்த தேசிய மக்கள் சக்தி, தேர்தலின் பின்னர் அதே கட்சியுடன் இணைந்து தங்களை நம்பி வாக்களித்த மக்களை கைவிட்டுள்ளது.



நுவரெலியா மாவட்டம் உட்பட ஏனைய மாவட்டங்களில் சேவல் சின்னத்தில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயல்படுவார்கள் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவிப்பை வெளியிட்டது. நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் முன்னிலை பெற்ற கட்சிகளின் உறுப்பினர்களின் தொகை அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தை அமைத்துக் கொள்வதே பொருத்தமானது என்ற கருத்திற்கு இணங்க, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். நுவரெலியா மாவட்டத்திலுள்ள 12 உள்ளூராட்சி மன்றங்களிலும் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை பெற்றுக்கொள்ளவில்லை.




இந்த நிலையில் கொட்டகலை மற்றும் அக்கரப்பத்தனை பிரதேச சபைகளின் அதிகாரத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பன இணைந்து கைப்பற்றின. அத்துடன், நுவரெலியா மாநகர சபை, நுவரெலியா பிரதேச சபை, தலவாக்கலை - லிந்துலை நகர சபை, ஹட்டன் - டிக்கோயா நகரசபை, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்த பிரதேச சபைகளை இந்த இரு கட்சிகளும் இணைந்து கைப்பற்றியிருந்தன. இதில் நோர்வூட் பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தங்களின் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கு புறம்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுடன் இணைந்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியிருந்தனர்.



தேர்தல் காலத்தில் கடுமையாக விமர்சித்த கட்சியுடன் எவ்வாறு இணைவது என்ற கேள்வியை முன்னிறுத்தி அவர்கள் இந்த தீர்மானத்தை மேற்கொண்டிருந்தனர். இதன்படி, நோர்வூட் பிரதேச சபையை இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு வழங்குவதாக தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்த போதிலும் அவ்வாறு இடம்பெறவில்லை.



நுவரெலியா மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை பெற்றுக்கொள்ளாத மன்றங்களில் கூட்டணி மூலம் ஆட்சியை கைப்பற்றுவதற்கான பேச்சுவார்த்தைகள் தேர்தலின் பின்னரான ஒரு மாத காலமாக இடம்பெற்றன.

**மருதன் ராம்**

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த தமிழ் முற்போக்கு கூட்டணியும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் ஆரம்பம் முதலே பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வந்த போதும் இறுதி தீர்மானம் எட்டப்படவில்லை.

பல பேச்சுவார்த்தைகளை எதிர்க்கட்சிகளுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மேற்கொண்ட போதும், இறுதியில் சஜித் பிரேமதாச, ரணில் விக்ரமசிங்க, தமிழ் முற்போக்கு கூட்டணி உறுப்பினர்கள் அனைவரையும் புறக்கணித்து தேசிய மக்கள் சக்தியுடன் இணையும் தீர்மானத்தை ஜீவன் தொண்டமான் அறிவித்தது ஏன்? என்ற வலுவான கேள்வி எழுகிறது. தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்பாகவே தேசிய மக்கள் சக்தியை இலக்கு வைத்து பிரசாரங்களை முன்னெடுத்ததுடன், தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தை கைப்பற்றுவதை தடுப்பதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தன



ஆனால் தேர்தலுக்குப் பின்னர் பொது எதிரணிக் கூட்டுக்குள் இணைந்து செயற்படுவது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றுக்கிடையே இணக்கப்பாடு எட்டப்படவில்லை. தேர்தல் காலங்களில் தேசிய மக்கள் சக்தியும், மலையக கட்சிகளும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருந்தனர். குறிப்பாக மலையக கட்சிகளின் மீது பல ஊழல் குற்றச்சாட்டுக்களை தேசிய மக்கள் சக்தி முன்வைத்திருந்தது.

### ஏமாற்றமடைந்த மலையக மக்கள்

தேசிய மக்கள் சக்தியின் குற்றச்சாட்டுக்களுடன் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மலையக மக்கள் பல மலையக அரசியல் கட்சிகளை புறக்கணித்தனர். இதனை மார்தட்டி தேசிய மக்கள் சக்தியும் பல இடங்களில் கூறியிருந்தது. இறுதியில் மக்களின் எதிர்பார்ப்பை புறந்தள்ளி அதே மலையக கட்சியுடன் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தது. இதில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு விடயமும் உள்ளது. சிங்கள மக்கள் வாழக்கூடிய உள்ளூராட்சி மன்றங்களிலும் பிரதான மாநகர மற்றும் நகர சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத்தை தம்வசம் வைத்துக்கொண்டு, அதிகப்படியான மலையக மக்கள் வாழும் பிரதேச சபைகளின் அதிகாரத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு தேசிய மக்கள் சக்தி வழங்கியது.

தங்களுக்கு விடிவு வரும் என்ற எதிர்பார்ப்புடன் வாக்களித்த மக்களுக்கு அதிலும்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# ட்ரம்பின் மாற்றம் அழிவு யாருக்கு?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

ரஷ்யாவுக்கும்அமெரிக்காவிற்கும்இடையிலான உறவுகள் மீண்டும் முறிந்துவிட்டதாக நாம் கருதலாம். ஆனால் அது உறவு நிலை அல்ல, 2022 ஆம் ஆண்டு உக்ரைன் மீதான ரஷ்யாவின் சிறப்புப் படை நடவடிக்கைக்கு எதிராக மேற்குலகம் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளுடன் 2014 ஆம் ஆண்டு முறிந்துபோன ரஷ்ய - மேற்குலக உறவுகளின் எஞ்சிய பகுதியும் முறிந்துவிட்டது. ஆனால் கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் ரஷ்யாவுடன் அவர் மேற்கொள்ள முயற்சித்த உறவுகள் என்பது அவரின் வியாபாரமும், ரஷ்யாவை ஏமாற்றும் தந்திரத்தையும் கொண்டது.



ஆனால் அதனை புரிந்துகொண்ட ரஷ்யா ட்ரம்பை உள்வாங்கி அவரின் உண்மையான தோற்றத்தை அவரின் மூலமே வெளிக்கொண்டுவரும் நடவடிக்கையில் இந்தவாரம் வெற்றி பெற்றுள்ளது. அதாவது, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இறுதியாக ரஷ்யா குறித்து தனது மிகவும் எதிர்பார்க்கப்பட்ட "முக்கியமான அறிக்கையை" வெளியிட்டுள்ளார். குறிப்பாக, நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட 360 பாகையால் மாறும் மாற்றம் வரப்போகிறது என்ற ஊகங்கள் உக்ரைன் ஆதரவு வட்டாரங்களில் பல நாட்களாக பரவி வந்தன. ட்ரம்ப், இறுதியாக கடுமையாக மாறுவார் என்று அவர்கள் நம்பினர். அது நடந்துவிட்டதாகவே தற்போது உக்ரைனும், மேற்கு ஐரோப்பாவும் மகிழ்ச்சியடைந்துள்ளன.




"மிகவும் கடுமையான இறுதி எச்சரிக்கை" என்று ட்ரம்ப் கூறுகின்ற எச்சரிக்கையில், ரஷ்யா மற்றும் அதன் வர்த்தக நட்பு நாடுகளுக்கு எதிராக வரித் தடைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. ரஷ்யா ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்ளத் தவறினால், 50 நாட்களுக்குப் பிறகு நடைமுறைக்கு வரும் 100% வரிகள் என்ற யோசனையை அவர் முன் வைத்துள்ளார். உக்ரைனுக்கு புதிய ஆயுத விநியோகங்களையும் அறிவித்துள்ளார். ஆனால் அவை இலவசமானவை அல்ல - அவை ஐரோப்பிய இடைத்தரகர்கள் மூலம் விற்கப்படும்.



உக்ரைனுக்கு 17 பேட்ரியாட் தொகுதிகள் (Batteries) வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் அது ஒரு தெளிவற்றது. ஒரு பேட்ரியாட் தொகுதியில் 6 தொடக்கம் 8 ஏவுதளங்கள் (Launchers) இருக்கும். அமெரிக்காவிடம் பாவனையில் உள்ள பேட்ரியாட் தொகுதிகளின் எண்ணிக்கையே 30 ஆகவே உள்ளது. அண்மையில் கூட ஜெர்மனியின் பாதுகாப்பு அமைச்சர் தம்மிடம் முன்னர் இருந்து 12 பேட்ரியாட் தொகுதிகளில் தற்போது 6 தொகுதிகளே உள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே அமெரிக்கா தன்னிடம் உள்ள 30 தொகுதிகளில் 17 தொகுதிகளை உக்ரைனுக்கு கொடுக்கும் நிலையில் இல்லை. அதேசமயம் 17 ஏவுகணைகளை (Patriot missiles) வழங்கப்போகின்றதா என்ற கேள்விகளும் எழுந்திருந்தன. அது மிகவும் நகைப்புக்கிடமானது. ஏனெனில் 17 ஏவுகணைகள் ஒரு தாக்குதலை சமாளிக்கவே போதுமானதல்ல.

அண்மையில் கத்தாரில் உள்ள அமெரிக்காவின் தளத்தை ஈரானின் ஏவுகணைகள் தாக்கிய போது அமெரிக்கா 24 பேட்ரியாட் ஏவுகணைகளை பயன்படுத்தியிருந்தது.

எனவே அமெரிக்கா கூறியது 17 ஏவுதளங்களாக இருக்கலாம் அதாவது 2 அல்லது 3 பேட்ரியாட் தொகுதிகள். ஆனால் இந்த ஆயுதங்கள் உக்ரைன் போரின் போக்கை மாற்றுமா என்றால் அது சாத்தியமற்றது. ஏற்கனவே பல பேட்ரியாட் தொகுதிகள் உக்ரைனுக்கு வழங்கப்பட்டபோதும், ரஷ்யாவின் ஏவுகணைகளை முற்றாக அவர்களால் தடுக்க முடியவில்லை என்பதுடன், பல பேட்ரியாட் தொகுதிகளும் அழிவடைந்துள்ளன. மேலும் உக்ரைனுக்கு வரும் ஆயுதங்களை ரஷ்யா அவை களமுனைகளுக்கு செல்வதற்கு முன்னரே ஆயுதக் கிடங்குகளில் வைத்து அழித்துவிடுகின்றது. எனவேதான் போலந்தின் எல்லைகளில் கூட ரஷ்யாவின் கைப்ஸன் கின்ஸால் ஏவுகணைகள் வீழ்ந்து வெடிக்கின்றன.

கடந்த இரு வாரங்களாக உக்ரைன் மீது ரஷ்யா தனது தாக்குதல்களை அதிகரித்துள்ளது. தினமும் 500 இற்கு மேற்பட்ட ஆளில்லாத தாக்குதல் விமானங்களையும், பல ஏவுகணைகளையும் அது பயன்படுத்தி வருகின்றது. மேலும் களமுனைகளிலும் அது தொடர்ந்து முன்நகர்ந்து வருகின்றது. கார்கிவ் பகுதி மீதான படை நடவடிக்கையில் உக்ரைன் தனது சிறந்த படையணிகளை இழந்துள்ளதால் ரஷ்யாவின் தாக்குதல்களை தடுப்பதற்கோ அல்லது பதில் தாக்குதல்களை மேற்கொள்வதற்கோ உக்ரைன் திணறி வருகின்றது..



உக்ரைனின் படைகளின் மிகப்பெரிய பிரச்சினை மனிதவளம். படைகளில் தானாக இணைபவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. உக்ரைனின் இராணுவம் இப்போது கட்டாய இராணுவ சேவையை நம்பியுள்ளது. ஆனால் இந்த கட்டாய ஆட்சேர்ப்புக்கு எதிராக உக்ரைன் மக்கள் கடும் எதிர்ப்புக்களை தெரிவித்து வருகின்றனர். மேற்குலக நாடுகளின் நலன்களுக்காக தமது பிள்ளைகளை பலியிட அவர்கள் தற்போது விரும்பவில்லை. கட்டாய ஆட்சேர்ப்பு படை வாகனங்கள் பல இடங்களில் பொதுமக்களால்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## காசாவில் கட்ட . . . தொடர்ச்சி . . .

ஆரம்பக் குழுவை தங்க வைக்கக்கூடிய பகுதியை உருவாக்கும் திட்டமாகும். பின்னர், இது போருக்கு முந்தைய 2.2 மில்லியன் மக்களைக் கொண்ட அனைத்து பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இந்த சிறை முகாம் சர்வதேசப் படைகளால் நிர்வகிக்கப்படும். ஹமாஸ் அங்கு இருக்க முடியாது என்றும், அந்த முகாம்களில் வைக்கப்படும் பாலஸ்தீனியர்கள் காசாவின் பிற பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், மாறாக பிற குறிப்பிடப்படாதநாடுகளுக்கு“தன்னார்வத்துடன் குடியேற” ஊக்குவிக்கப்படுவார்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

காட்ஸ் முன்வைத்த இந்த திட்டம் பல்வேறு விமர்சனங்களை சந்தித்து வருகிறது. முன்னாள் பிரதமர் எஹுட் ஒல்மெர்ட் இதை “வதை முகாம்” எனக் கண்டித்துள்ளார்; இஸ்ரேலிய சட்டவியலாளர்கள் இதை சட்டவிரோதமானது என தெரிவித்துள்ளார்கள். இதற்குப் பொறுப்பான இராணுவத்தினரால் கூட இது விமர்சிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில், பிரிட்டிஷ் அமைச்சர் இந்த திட்டத்தால் தாம் “திகைத்துப் போனதாக” கூறியிருக்கின்றார். ஆஸ்திரியா மற்றும் ஜெர்மனி வெளியுறவு அமைச்சர்கள் தங்கள் “கவலையை” வெளிப்படுத்தியுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபை இந்த யோசனையை “உறுதியாக எதிர்க்கிறது” என்றும் தெரிவித்துள்ளது.

ஆனால், இஸ்ரேலிய அரசாங்க உறுப்பினர்கள் இந்த யோசனையை ஆதரித்து வருகின்றனர். மேலும் அரசாங்கத்திற்குள்ளும் இதன் சுருக்கப்பட்ட விவாதங்கள் குறித்தும் இஸ்ரேலிய ஊடகங்களில் தகவல்கள் தொடர்ந்து வெளிவருகின்றன. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இஸ்ரேலிய இராணுவத்தால் வழங்கப்பட்ட திட்டத்தை விட வேகமான மற்றும் குறைந்த செலவில் ஒரு திட்டத்தை மட்டுமே கேட்டதாக கூறப்படுகிறது.

இஸ்ரேல் சமீபத்தில் ரஃபாவில் மேற்கொண்டு வரும் தாக்குதல்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது, இது “இந்த முகாமை அமைப்பதற்கான முயற்சி” என விமர்சகர்களால் கூறப்படுகிறது.

பாலஸ்தீனப் பிரதேசத்தை ஆக்கிரமிக்க தெய்வீக ஆணை இருப்பதாக நம்பும் இஸ்ரேலின் சில கடுமையான குடியேறி குழுக்களின் இலட்சியமாக, காசாவில் உள்ள மக்களை வெளியேற்றுவது தொடர்பான கருத்துக்கள் நீண்ட காலமாக இருந்து வருகின்றன.

பிப்ரவரியில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களை வேறு இடங்களுக்கு மாற்றலாம் என பரிந்துரைத்தபோது, இஸ்ரேலிய தீவிர வலதுசாரிகளுக்கு அந்த யோசனை ஊக்கமாக அமைந்தது. அன்றிலிருந்து, நெதன்யாகு மற்றும் நிதியமைச்சர் பெசலெல் ஸ்மோட்ரிச், இருவரும் இடம்பெயர்வுக்கான கருத்துக்களை வெளிப்படையாக ஆதரித்து வருகின்றனர்.

## வெளிநாட்டு . . . தொடர்ச்சி . . .

உள்ள யூடியூபர்கள் மற்றும் இணைய ஊடக நிறுவனங்களுக்கு, தனக்கு சார்பான அரசியல் ஆதரவை உருவாக்க பணம் செலுத்துகிறது. நிறுவனம் வெளிப்படைத்தன்மையை பேணுவதாகக் கூறினாலும், பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் உள்ள உறவுகளை வெளியிடக்கூடாது என்ற கடுமையான கட்டுப்பாடுகளை பணியாளர்களுக்கு விதித்துள்ளது.

முன்னாள் ஊழியர்கள் இந்த செயல்பாட்டை “அரசுப் பிரச்சாரம்” என்று விவரித்துள்ளனர். ஜிங்கிற்கும் செல்வாக்கு செலுத்துபவர்களுக்கும் இடையிலான உறவு “மிகவும் ஊழல்மிக்கது” என்று ஒருவர் *Declassified UK*-க்கு தெரிவித்தார்.

ஐரோப்பிய சார்பு கட்சியான ‘முற்போக்கு ஸ்லோவாக்கியா’வின் வாக்குகளை அதிகரிக்க வடிவமைக்கப்பட்ட செல்வாக்கு ஆவணங்களுடன், இளம் வாக்காளர்களை குறிவைத்து ஜிங்க் ஸ்லோவாக்கியாவின் 2023 தேர்தல்களில் தலையிட்டதாக மற்றொரு முன்னாள் ஊழியர் கூறினார். இருப்பினும், அந்த வாக்கெடுப்பில் இறுதியாக ராபர்ட் ஃபிகோவின் *Smer* கட்சி வெற்றி பெற்றது. அந்த கட்சி ரஷ்யாவுடன் நட்புறவை பேணுவதையும் பழைய வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவதையும் வலியுறுத்தி வந்தது.

இஸ்லாமிய செய்தி தளங்களை ரகசியமாக இயக்கியதற்காக ஜிங்க் முன்பு குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. 2021-ஆம் ஆண்டில், பால்டிக் நாடுகளில் ரஷ்ய மொழி பேசும் சமூகங்களின் கருத்துக்களை மாற்ற, சையோப் பிரச்சாரங்களை நடத்த இந்த அமைப்பு நகைச்சுவை நடிகர்கள் மற்றும் யூடியூபர்களை நியமித்ததாகக் கூறப்படுகிறது.

இங்கிலாந்து அரசாங்கத்தைத் தவிர, பொது ஆவணங்களின்படி அமெரிக்கா மற்றும் பெல்ஜிய அரசாங்கத்திலிருந்தும் இந்த நிறுவனம் மில்லியன் கணக்கான நிதிகளைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் *Oxford Russia Fund* உட்பட பல பிரிட்டிஷ் நிறுவனங்கள் ரஷ்ய சமூகத்தை சீர்குலைக்கவும் மேற்கத்திய நிகழ்ச்சி நிரல்களை ஊக்குவிக்கவும் இரகசிய பிரச்சாரங்களை நடத்துகின்றன என்று ரஷ்யாவின் பாதுகாப்பு சேவைகள் சமீபத்தில் குற்றம் சாட்டியுள்ளன.

## மலையக மக் . . . தொடர்ச்சி . . .

ஏமாற்றமே. மறுபுறம் தமிழ் மக்கள் அதிகமாக உள்ளஹட்டன்-டிக்கோயாமற்றும்தலவாக்கலை - லிந்துலை ஆகிய நகரசபைகளின் அதிகாரத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேசிய மக்கள் சக்திக்கு தாரை வார்த்தது. இதன்படி, இந்த இரு கட்சிகளும் தங்களை நம்பிய மக்களை காட்டிக்கொடுத்துள்ளன என்பது புலனாகிறது.

சுதந்திர இலங்கைக்கு முன்னரான நாட்டை காலனித்துவத்தில் வைத்திருந்த பிரித்தானியர்களும் சரி, அதன் பின்னரான சுதந்திர இலங்கையின் ஆட்சியாளர்களும் சரி மலையகத் தோட்டத் தொழிலாளர்களை உழைக்கும் இயந்திரங்கள் போல் கருதி அவர்கள் தொடர்பாக பொருளாதார கொள்கைகளைக் கடைப்பிடித்தனரே தவிர, அந்த மக்களின் உரிமைகள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாக எவ்வித அக்கறையினையும் கொண்டிருக்கவில்லை. இந்த நிலையில், மலையக மக்கள் தமது போராட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டிய அவசியத்தை உள்ளூராட்சி மன்றங்களில் அரசியல் கட்சிகளின் செயற்பாடு மீண்டும் ஒருமுறை எடுத்துக்காட்டிவிட்டது. இனியும் ஏமாற்று அரசியலுக்கு மலையக மக்கள் இடமளிக்கக் கூடாது.

• • •

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

JR Print
www.jrprint.com
WhatsApp 07939 998730
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

**“கறுப்பு யூலை”... தொடர்ச்சி ...**

வசிக்கும் வெள்ளவத்தை, தெகிவளை போன்ற பகுதிகளிலும், கொழும்பு பிரதான வீதி, ஐந்துலாம் படிச் சந்தியில் உள்ள கடைகளும் தாக்கப்பட்டன.

அன்டர்சன் தொடர் குடியிருப்பு, எல்விட்டிகல, டொரிங்டன், திம்பிரிகசாய தொடர் குடியிருப்புகளில் இருந்த தமிழ் வீடுகள் தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டன.

மிகவும் பாதுகாப்பானதென அப்போது கருதப்பட்ட கறுவாத்தோட்டத்தில் இருந்த தமிழர் வீடுகளும் தாக்கப்பட்டன.

கடவத்தை, களனி, நுகேகொடை, இரத்மலானை போன்ற புறநகரங்களிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தியத் தூதரின் வீடும் தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டதுடன், நீர்கொழும்பிலும் தமிழர் பகுதிகள் தாக்கப்பட்டதை அடுத்து, கம்பகா மாவட்டத்திலும் ஊரடங்கு அறிவிக்கப்பட்டது.

களுத்துறையில், கொழும்பில் இருந்த பல தமிழர்கள் ஊரை விட்டு வெளியேறிய போது, பல சிங்களவர்களும் முஸ்லிம்களும் வன்முறைக் கும்பல்களின் நடவடிக்கைகளின் மத்தியில் பல தமிழர்களின் உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்றினர்.

அடுத்தடுத்த நாட்களில், பல தமிழர்கள் அரசாங்ககட்டடங்கள், கோவில்கள்மற்றும்சிங்கள மற்றும் முஸ்லிம் வீடுகளில் தஞ்சமடைந்தனர்.

நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான கண்டியிலும் வன்முறை பரவியது. பேராதனை வீதியிலுள்ள டெல்ட்டா மருந்தகம் தீப்பற்றி எரிந்தது.

கண்டி மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தென்பகுதி முழுவதும் கறுப்பு யூலை இனப்படுகொலை அரங்கேறியது.

இதேவேளை திருகோணமலையில், விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதாகவும், காரைநகர் கடற்படைத்தளம் அழிக்கப்பட்டதாகவும், நாக விகாரை தேய்த்து விடப்பட்டதாகவும் பொய்யான வதந்திகள் பரவ ஆரம்பித்தன.

திருகோணமலை கடற்படைத் தளத்தை தளமாகக் கொண்ட கடற்படையினர் மத்திய வீதி, கப்பல்துறை வீதி, பிரதான வீதி மற்றும் வடக்கு கடற்கரைச் சாலையைத் தாக்கி வெறித்தனமாகச் சென்றனர். அவர்கள் தங்கள் தளத்திற்குத் திரும்புவதற்கு முன் 170 வீடுகளுக்குத் தீ மூட்டினர். திருஞானசம்பந்தன் வீதியிலுள்ள சிவன் இந்து ஆலயமும் தாக்கப்பட்டது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடு முழுவதும் 1983, யூலை 26ஆம் தேதி ஊரடங்கு நீட்டிக்கப்பட்டது. பல்வேறு இனக்குழுக்கள் இணைந்துவாழ்ந்த பகுதிகளில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள்மற்றும் கொள்ளைகள் அதிகமாக இடம்பெற்றன.

ஜனாதிபதி ஜெயவர்தனவும், அவரது பிரதமர் பிரமதாசாவும், அமைச்சரவையும் 1983, யூலை 28ஆம் தேதி அவசர அமர்வில் கூடினர். ஜெயவர்தன பின்னர் தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அதில் அவர் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு சாட்டுப்போக்காக வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால் நுவரெலியா, கந்தப்பளை, காவ் எலிய, மாத்தளைஆகிய இடங்களில் வன்முறைகள் இடம்பெற்றன.

இன்று 42 ஆண்டுகள் கடந்தும், 1983 யூலை கலவரத்திற்கு பின்னர் 2009 மே 18 வரை, தொடர்ச்சியாக நூற்றுக்கணக்கான தமிழினப் படுகொலைகள் இடம்பெற்று, இலட்சக்கணக்கான தமிழர்கள் பலிகொடுக்கப்பட்டும், சர்வதேசமும் நீதி வழங்காமலும், அரசியல்தீர்வின்றி உள்ள நிலைமை தொடர்கிறது. நாம் இன்று நினைவுகளை மட்டும் அனுஷ்டிக்கும் தமிழ் இனமாகவே உள்ளோம்.

இன்று, 1983 கறுப்பு யூலையைத் தொடர்ந்து 42 ஆண்டுகள் கடக்கின்ற இவ்வேளையில், 1996இல் இடம்பெற்ற செம்மணி படுகொலை புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட தமிழர்களின் எலும்புக்கூடுகள், அந்த இனப்படுகொலைக்கு சாட்சியாக நிற்கின்றன.

கறுப்பு யூலையில் தென்பகுதியில் படுகொலையாக்கப்பட்ட தமிழர்களும், அவர்கள் இழந்த பல கோடி சொத்துகளும், விடையில்லா வினாவாகவே இருந்து வருகின்றன.

• • •

**அமெரிக்கா சீனா ... தொடர்ச்சி ...**

போன்றவற்றை மேற்பார்வையிடும் அமெரிக்க சர்வதேச மேம்பாட்டு நிறுவனம் மற்றும் அமெரிக்க குளோபல் மீடியா ஏஜென்சி ஆகியவற்றில் ஏற்பட்ட “குழப்பமான நீக்கம்” ஆகியவை, அமெரிக்காவின் சக்தி மற்றும் செல்வாக்கை பலவீனப்படுத்திய செயல்களாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

அமெரிக்க செனட் வெளியுறவுக் குழுவின் ஜனநாயக உறுப்பினர்களால் திங்களன்று (14) வெளியிடப்பட்ட அறிக்கை, சீனாவை “நமது நாட்டின் வரலாற்றில் வேறு எந்த மூலோபாய சவாலிலிருந்தும் வேறுபட்டது” என்று விவரிக்கிறது. இது, “உலகின் முன்னணி வல்லரசாக அமெரிக்காவை தோல்வியடையச் செய்வதற்கான நீண்டகால உத்தியைக் கொண்டுள்ளது” என்றும் கூறுகிறது.

“ஜனாதிபதி ட்ரம்ப் உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் பின்வாங்குகிறார். நட்பு நாடுகளைத் தாக்குவது, அமெரிக்காவின் ராஜதந்திர நடவடிக்கைகளை குறைப்பது, மற்றும் எதிரிகளை ஆதரிப்பது என்பவை சீனாவின் செல்வாக்கை வளர்க்கின்றன. சீனா தனது உறவுகளை விரிவுபடுத்தி, உலக ஒழுங்கை தன் நன்மைக்காக மறுவடிவமைக்கிறது” என்று அமெரிக்க செனட்டர் ஜீன் ஷாஹீன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கையின்படி, உலகசுகாதாரஅமைப்பு மற்றும் பாரிஸ் காலநிலை ஒப்பந்தம் போன்ற உலகளாவிய அமைப்புகளிலிருந்து ட்ரம்ப் விலகியதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப சீனா முயற்சி மேற்கொண்டு வருகின்றது. வெளிநாடுகளுக்கான நிதியுதவியை அதிகரிப்பதன் மூலமும், தனது ராஜதந்திரத் தாக்கத்தை பெருக்குவதற்கான நடவடிக்கைகளை சீனா எடுத்து வருகிறது.

அமெரிக்க வர்த்தக கூட்டாளிகளுக்கு எதிரான ட்ரம்பின் வரிவிதிப்பு போர், “கூட்டணிகள் மற்றும் பொருளாதார கூட்டமைப்புகளையும்” பாதித்துள்ளது. இதனால், நெருங்கிய நட்பு நாடுகள்கூடஅமெரிக்காவை விட்டு சீனாவின் பக்கம் சாயக்கூடிய நிலை உருவாகி வருகிறது என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்தியா-சீனா ... தொடர்ச்சி ...**

பாதிக்கக்கூடும்,” என்று ரூட்டே செய்தியாளர்களிடம் கூறினார்.

“எனவே, நீங்கள்விளாடிமிர்புடினுக்கு ஒரு தொலைபேசிஅழைப்பு எடுத்து, அவர்சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று அவருக்குத் தெரிவிக்குமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் இல்லையெனில், விளைவுகள் பிரேசில், இந்தியா மற்றும் சீனாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்,” என்றும் அவர் மேலும் கூறினார்.

2022 முதல், இந்தியாவும் சீனாவும் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதை கணிசமாக அதிகரித்துள்ளன. மே மாதத்தில், இந்தியா ரஷ்ய எரிபொருட்களை வாங்குவதில் இரண்டாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளது. மொத்தம் $4.9 பில்லியன் கொள்முதல் செய்யப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் கச்சா எண்ணெய் மட்டும் மொத்த மதிப்பில் சுமார் 72% ஆகும் என்று எரிசக்தி மற்றும் சுத்தமான காற்று ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவும் இந்தியாவும் ஒரு வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன. பரஸ்பர கட்டணங்களைத் தவிர்ப்பதற்காக ட்ரம்ப் நிர்ணயித்த ஆகஸ்ட் 1 காலக்கெடுவை பூர்த்தி செய்ய இருநாடுகளும் போட்டியிடுகின்றன.

ஜூன் மாதம், மூன்று நாடுகளை இலக்காகக் கொண்ட பொருளாதார தடைகள் மசோதாவில் தான் பணியாற்றி வருவதாகக் கூறிய அமெரிக்க செனட்டர் லிண்ட்சே கிரஹாமை, ரூட்டேவின் எச்சரிக்கை எதிரொலிக்கிறது.

இந்திய இராஜதந்திரிகளும் அதிகாரிகளும் இந்த மசோதாவை ஆதரித்த குடியரசுக் கட்சி செனட்டருடன் பேசினர். இதற்கு ட்ரம்பின் ஆதரவு உள்ளது.

ஜனவரியில் தனது இரண்டாவது பதவிக் காலத்தைத் தொடங்கியதிலிருந்து, ட்ரம்ப் BRICS அமைப்பிற்கு நேரடி அச்சுறுத்தல்களை விடுத்து, கூட்டணியுடன் இணைந்திருப்பதாகக் கருதப்படும் நாடுகள் மீது புதிய தடைகளை விதித்துவருகிறார்.

**கச்சத்தீவை ... தொடர்ச்சி ...**

பின்னர் 14 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கவே இல்லை என்றும் நாராயண் திருப்பதி குற்றம் சுமத்தியுள்ளார்.



**பயங்கரவாத ... தொடர்ச்சி ...**

சேனநாயக்க, “இது ஒரு சர்வாதிகாரம்” என தெரிவித்தார்.

தனது மருமகனான பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங் கவை வடக்கே தமிழர் போராளிகளை அழிக்க கட்டளை தளபதியாக நியமித்து, 1979, ஜூலை 31 முதல் டிசம்பர் 31 வரை ஆறு மாதங்களில் படை நடவடிக்கைகளை முன்னெடுத்தார். இதில் பல தமிழ் இளைஞர்கள் காணாமல் போனது குறிப்பிடத்தக்கது.

இச்சட்டம் தற்காலிகமாகவே கொண்டு வரப்பட்டாலும், 1982-இல் நிரந்தரமாக்கப்பட்டது. ஏறத்தாழ 10 மணிநேரமே விவாதம் நடந்தது. அவசரமாகவே இது நிறைவேற்றப் பட்டது.

இன்று, 46 ஆண்டுகளாக, இந்தச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே. பலரும் இதனால் கைது செய்யப்பட்டுள்ளனர்; இன்றும் தொடருகின்றனர்.

இச்சட்டத்தை நீக்க, சர்வதேச நாடுகள் தொடர்ந்து அழுத்தம் தருகின்றன. “தமிழரை வைத்து, தமிழர்களுக்கே எதிராக நிறைவேற்றப் பட்ட சட்டம்” என்ற விமர்சனம் அப்போது எழுந்தது.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய பின்னர், ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன, இராணுவ தளபதியாக இருந்த பிரிகேடியர் ஐ. விஜயதுங்காவை 1979, யூலை 20 அன்று அழைத்து, 1979, டிசம்பர் 31க்குள் நாட்டிலுள்ள பயங்கரவாதத்தை வேரோடு ஒழிக்க உத்தரவிட்டார்.

வடகிழக்கில் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு ஆதரவு கிடைக்காத ஒரே தொகுதி மட்டக்களப்பின் கல்குடா தொகுதியாகும். இங்கு போட்டியிட்ட கே. டவிலியூ. தேவநாயகம் வெற்றி பெற்றார். அவரை நீதி அமைச்சராக நியமித்த ஜே.ஆர். ஜெயவர்தன, 1980, பிப்ரவரி 14 அன்று அந்த பதவியை மாற்றி, உள்ளூராட்சி அமைச்சராக மாற்றினார்.

இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்காக மட்டுமே ஒருத் தமிழரை நீதி அமைச்சராக நியமித்தது என்ற வரலாறு இளைஞர்கள் அறிய வேண்டியது.

1979 முதல் 2025 வரை 46 ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதோடு, ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டும், சிலர் இன்றும் சிறையில் இருக்கின்றனர்.

2025, யூலை 4 அன்று, தேசிய மக்கள் சக்தி அரசின் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஒரு தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில், இச்சட்டம் 2025, செப்டம்பர் மாதத்தில் முழுமையாக நீக்கப்படும் என்று தெரிவித்தார்.

“1979-இல் தற்காலிக ஏற்பாட்டுச் சட்டமாகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அது இன்றளவும் நீடிக்கின்றது. இதனை நீக்கத் திட்டமிட்டு குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் கருத்துகளும் கோரப்பட்டன. செப்டம்பரில் சட்டம் முழுமையாக இரத்து செய்யப்படும்.”

46 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் இதனை நீக்குவதாகக் கூறி காலம் கடத்தியதே உண்மை.

• • •

**அரசுகளுடனான ... தொடர்ச்சி ...**

வாக்கியம். சோக்ரடீஸ், இந்த வாக்கியத்திற்குத் தொட்டப்பாவானார்.

ஆனால் ஒரு மகானால், ஒரு தத்துவ ஞானியாலே இது வியாக்கியானப்படுத்தப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டதால், அதன் மகத்துவம் இன்னும் அதிகமாகவே உள்ளது. அதுவும் நல்லதே.

வெற்றிக்கனிகளைப் பெறுவது என்பது, அவனவன் தன் பலத்தை உணர்ந்து, அதற்குரிய இடங்களில் அவற்றைப் பிரயோகிப்பதிலேயே உள்ளது. “உன்னையே நீ அறிவாயாக” என்ற கூற்று இதனையே போதிக்கின்றது. திருவள்ளுவரும் இதைப்பற்றி பல இடங்களில் பலவாறு கூறியுள்ளார்.

புல்லுண்ணியான மான், மாமிச உண்ணியான புலிக்குப் போதிக்க கூடாது. அது எப்படி போதித்தாலும், போதிக்கும் மானையே உண்ணும். மானுக்குப் புலி எதிரியேயானாலும், புலிக்கு மான் உயிர்மூச்சு.

ஆதலால் முதலில் மான் தன்னிலை உணர்ந்து, தற்காத்து முன்னேற வேண்டும். அதாவது, மான் முதலில் தன் பெறுமானத்தை உணர வேண்டும்; நான்கு கிலோ மீட்டர் தூரம் வேகமாக ஓடக் கூடிய தனது பலத்தையுணர வேண்டும். புலிக்கு முன்னால் 100 மீட்டர் தூரத்துக்கே மட்டுப்படும் தனது பலவீனத்தையும் உணர வேண்டும்.

அதைச் சரிவர கையாண்டால், மானால் புலியை வெல்ல முடியும். வெற்றிதான் வாழ்வை நிர்ணயிக்குமே தவிர, பலியாவது அல்ல.

சிங்கம், புலி என்பனவற்றிடமிருந்து மான் விலகிச் செல்லும். அதேவேளை, சிங்கம், புலி போன்றவற்றிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள, அந்த மான் பபூன் குரங்கை அண்டி வாழும். அதாவது, வேட்டைப் பிராணிகளைக் கண்டால், பபூன் குரங்கு மர உச்சியிலிருந்து எச்சரிக்கை ஒலி எழுப்புவதால், அதன் நிழலின் கீழ் தானும் நன்மையடைய, பபூன் குரங்கை அண்டி மான் வாழும்.

இவ்வாறு, மானைப் போல பாதகமானவற்றிலிருந்து விலகிப் போவதும், சாதகமானவற்றுடன் அண்டி வாழ்வதும் போன்ற உறவு நிலைகளும் இயல்புகளும், அரசுகளை அணுகுவதும் கையாளுவதுமான உறவு நிலைகளும், உலகளாவிய அரசியல் யதார்த்தத்தில் காணப்படுகின்றன.

தான் வாழும் ஓர் அரசுக்குள் அரசை கையாள்வது என்பது ஒரு முறை. மற்றைய அரசுகளைக் கையாள்வது என்பது இன்னொரு முறை. ஈழத் தமிழர்கள் ஒடுக்கும் அரசுக்குட்பட்டிருப்பதனால், அந்த அரசைத் தமது பகை அரசாகவே கொள்வர். அதேவேளை, ஒடுக்கும் அந்த அரசுக்கு ஏனைய அரசுகளுடன் நட்புறவுகள் இருக்கும்.

இந்த வகையில், ஒடுக்கப்படும் இனத்திற்கு உள்ளும் புறமும் அரசுகளைக் கையாளுவது என்பது மிகவும் கடினமான காரியம். எனவே, அதிகமாக செழிப்பான, நெகிழ்ச்சித் தன்மையான, மிகவும் சமயோசிதமான வகையிலேயே, ஒடுக்கப்படும் இனம் வெளிநாடுகளை, வெளியரசுகளை அணுகவும் கையாளவும் வேண்டும்.

இதில் கடுமையான போக்குகளுக்கிடமில்லை. அதிக நட்புகளை வளர்க்க வேண்டுமென்றால், அதிக நெகிழ்ச்சித் தன்மைகளை கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

உறவுகளைக் கட்டமைப்பதில் இயல்பாகவே ஒவ்வொரு பிராணியும், ஒவ்வொரு மனிதனும் தெளிவான சுயநலமும், தன்னலமும் சார்ந்த அணுகுமுறைகளையே கொண்டவர்கள். மனித உயிரின் அதி உயர்அதிகார பீடமான அரசுகளும், முற்றிலும் மேற்படி சுயநலத்தைக் கொண்டவைகளே.

உதாரணமாக, மனிதன் போற்றும் தெய்வீகக் காதல் கூட முற்றிலும் சுயநலமுடையதே. காதல் பற்றிய பின்வரும் தத்துவக் கூற்றை நோக்குவோம். அதாவது, ஒருவன் ஒரு பெண்ணின் மீது தீராக்காதல் கொண்டு அலைகிறான். அப்போது, அவன் அவளிடம் தனது தீராக் காதலைப் பற்றி கூறும்போது, அவளின் மீது அளவற்ற அன்பும், பாசமும், காதலும் கொண்டுள் ளேன் எனச் சொல்கிறான்.

அதற்கு அவள் பின்வருமாறு பதில் சொல்வதாக அந்தக் கூற்று அமைகிறது: “நீ என்னை காதலிக்கவில்லை; ஆனால் என்னில் உன்னைக் காதலிக்கின்றாய்”(*“You don’t love me, but you love yourself in me.”*) அதாவது, “நீ என் மீது உன் நலனைத் தேடுவதே, நீ என்னைக் காதலிப்பதாகச் சொல்வதற்கான உண்மையான காரணமாகும்” என்பதே அதன் பொருள். இது இருவருக்கும்-இருபாலாருக்கும்- பொருந்தும். அதாவது, தெய்வீகக் காதல் என்று போற்றப்படும் அந்தக் காதல் கூட பரஸ்பர சுயநலத்தில்தான் தங்கியுள்ளது.

அப்படியென்றால், அரசுகளுடனான உறவுகள், நாடுகளுடனான உறவுகள் என்பவற்றிலும் இருதரப்பின் நலன்கள் இன்றி அவை ஒருபோதும் அமைய முடியாது. அதாவது, ஓர் அரசுடன் உறவு கொள்ள வேண்டுமென்றால், அந்த அரசு எதிர்பார்க்கும் தேவைகளையும் கருத்தில் கொண்டாக வேண்டும். கொடுக்கல்–வாங்கல் எனும் இரண்டும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களாக அமைகின்றன என்பதே உறவுகளின் யதார்த்தம்.

இந்தக் கொடுக்கல்–வாங்கல் சார்ந்த உறவானது, யதார்த்த சூழல்களுக்கு பொருத்தமாகக் கையாளப்பட வேண்டியதாகும்.

இந்த வகையில், இரத்தமும் தசையுமான அரசியலமைப்பின் இயல்பையும், அதற்குரிய உயிரோட்டமான நடைமுறைகளையும் புரிந்து கொள்ளும் ஒரு பக்கம் இருக்கிறதேயானால், மற்றொரு பக்கமாக நெருக்கடிகளின் மத்தியில் அரசுகள் குடைசாயக்கூடியவை என்பதையும் கருத்தில் கொண்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசுகளுக்கிடையேயான உறவுகளைக் கையாள வேண்டிய நிலை ஏற்படுகிறது.

அரசு என்பது வெறும் அரசியந்திரம் மட்டுமல்ல. மக்கள் யுகத்தில், அந்த அரசியந்திரம் அந்த அரசுக்கு உள்ளும் புறமும் இருந்து, மக்கள் எழுச்சிகளாலும், பலம் வாய்ந்த மக்கள்தொகைச் சாதனங்களாலும் சுற்றி வளைக்கப்படும் வாய்ப்பு உண்டு.

அரசு சுயநலம் கொண்ட நிறுவனம் என்பதாலேயே, மேற்படி நெருக்கடிகளினால் நிர்பந்திக்கப்படும் போது, தற்காப்பு நிலைக்கு தள்ளப்படும்போது, தனது இறுக்கமான பிடியிலிருந்து அது தளர்ந்து, நெகிழ்ச்சியான முடிவுகளுக்குள் சென்றடைய வாய்ப்பு உண்டு.

இந்த வகையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியந்திரங்களை மக்கள் சார்ந்த நலன்களுக்கு, அல்லது விடுதலைப் போராட்டங்களின் நோக்கங்களுக்கேற்ப தலை சாய்க்க வைக்கலாம். ஆனால் இது புவியியல் மற்றும் யதார்த்த சூழல்களுக்குட்பட்டது.

இவ்வகை சூழ்நிலைகளை தெளிவாக புரிந்து கொள்ளவும், உள்ள வாய்ப்புகளைக் கையாளும் வித்தைகளை அடையாளம் காணவும் வேண்டும். இவற்றில் மனோரம்யமான விருப்பங்களுக்கு இடமில்லை.

யதார்த்த சூழலில் பொருத்தமான நடைமுறை சார்ந்த சிந்தனைக்கும் செயற்பாட்டுக்குமே இடமுண்டு.

அண்டப் பிரபஞ்சத்தில் “எதுவுமே தன்னிச்சையானது அல்ல”- *No free will.*”அனைத்துமே நிபந்தனைகளுக்குட்பட்டவை என்ற ஐன்ஸ்டைன் (*Einstein*) கூறிய விஞ்ஞானக் கூற்று, பிராணிகள், மனித நடத்தைகள் மற்றும் அரசியல் அனைத்துக்கும் பொதுவான அடிப்படை உண்மையாகும்.

இந்த வகையில், ஈழத்தமிழ் மக்கள் தமது அரசியல் எதிர்காலத்தை சூழல் சார்ந்த நிபந்தனைகளுக்குள் புரிந்து கொண்டு, மேம்பட்ட தீர்மானங்களை எடுத்து முன்னேற வேண்டும்.

• • •

## ட்ரம்பின் மாற்றம் ... தொடர்ச்சி ...

தாக்கப்பட்டுள்ளன. அதேசமயம் கட்டாயமாக சேர்க்கப்பட்டவர்கள் படைகளில் இருந்து தப்பி யோடும் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

இந்த ஆண்டின் முதல் பாதியில் மட்டும் 107,000 க்கும் மேற்பட்டவர்கள் தப்பியோடியுள்ளனர். 2024 ஆம் ஆண்டின் முழுவதையும் விட 20% அதிகம், மற்றும் போர் தொடங்கியபோது இருந்த படையினருடன் ஒப்பிடும்போது கிட்டத்தட்ட பாதி அது. ஆனால் இது அதிகாரப்பூர்வ எண்ணிக்கை மட்டுமே; உண்மையான எண்ணிக்கை அதிகமாக இருக்கும். அதாவது களமுனைகளில் தினமும் இறக்கும் மற்றும் காயமடையும் படையினரை விட தப்பியோடுபவர்களின் எண்ணிக்கை அதிகம்.

அதேசமயம், உக்ரைன் படையினரின் ஆயுத விநியோகமும் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு மேற்குலகத்திற்கு சவாலாக திறக்கப்பட்ட பல களமுனைகள் காரணம். மேலும் மலிவான விலையில் அவர்களால் ஆயுதங்களையும் உற்பத்தி செய்யவும் முடியவில்லை. ரஷ்யாவுக்கு சீனா மற்றும் வடகொரியா போன்ற நாடுகளில் இருந்து கிடைக்கும் ஆயுதங்களுடன் ஒப்பிடும் போது மேற்குலகம் பின்தங்கியே உள்ளது.

உக்ரைன் படையினர் 45 வீதமே போருக்கு தயாரான ஆயுதங்களை கொண்டுள்ளனர் என மேற்குலக படைத்துறை அவதானிகள் தெரிவிக்கின்றனர். அதாவது ஒரு படைப்பிரிவு 45% ஆயுதத்தையே கொண்டிருக்குமானால் அது போரிட தகுதியற்றதாகும்.

இருந்தபோதும் தற்போதும் போர் தொடர்வதற்கு காரணம் ரஷ்யா உக்ரைனின் நிலப்பரப்பை கைப்பற்றுவதை விட அதன் படை பலத்தை முற்றாக அழிப்பதில் கவனம் செலுத்துவதும், தனது எல்லைகளை பாதுகாப்பதற்காக முற்றாக ஒரு ஆளில்லாத தாக்குதல் விமானங்களின் தாக்குதல் உத்திக்கு உக்ரைன் மாறியதும் தான். எனவேதான் அண்மையில் அமெரிக்கா ஆளில்லாத தாக்குதல் விமானங்களின் உற்பத்தியிலும், மேம்பாட்டிலும் அதிக கவனம் செலுத்துவதாக பென்டகனின் பாதுகாப்புச் செயலாளர் பீட்டர் ஹெச் தெரிவித்தார்.

அமெரிக்காவை பொறுத்தவரையில் இந்த போரில் உக்ரைன் வெற்றிபெற முடியாது என்ற முடிவுக்கு ட்ரம்ப் வந்துவிட்டதாகவே தெரிகின்றது. எனவேதான் உக்ரைன் போரின் செலவுகளை ஐரோப்பாவின் தலையில் கட்டும் முதற்படியாக பற்றியாட் ஏவுகணைகளுக்கான நிதியை ஐரோப்பா செலுத்தும் என தெரிவித்துள்ளார். அதில் ட்ரம்ப் தனது வர்த்தக நலன்களைத் தான் முன்நிறுத்தியுள்ளார். அதாவது அமெரிக்கா தனது பழைய ஆயுதங்களை ஐரோப்பாவுக்கு விற்பனை செய்யப்போகின்றது. எனவே புதிய ஆயுத உற்பத்தி அதிகரிக்கும், ஆயுதவிற்பனை வருமானம் அதிகரிக்கும், புதிய வரிகள் மூலமும் நிதிகள் கிடைக்கும். உலக நாடுகள் அமெரிக்காவுடன் மேற்கொள்ளும் வர்த்தகம் 4 டிரில்லியன் டொலர்கள் என்றால் 10% வரியை போட்டாலே அமெரிக்கா வருடத்திற்கு 400 பில்லியன் டொலர்களை வருமானமாக பெற்றுவிடும். அது அமெரிக்காவின் ஒரு டிரில்லியன் வட்டிப் பணத்தை கட்டுவதற்கு பெரும் உதவியாக இருக்கும்.

எனவே உக்ரைன் போரில் அமெரிக்கா எடுத்துள்ள முடிவு என்பது அமெரிக்கா தனது நலன்களை பாதுகாப்பதற்கான நிலைப்பாடாகும், ஆனால் இந்த சதுரங்க ஆட்டத்தில் முற்றாக தோல்வியடையப்போவது உக்ரைனும், ஐரோப்பாவுமே. அவ்வாறு நிகழ்ந்தால் அது ஐரோப்பாவின் பூகோள அரசியல் மற்றும் படைத்துறை சம நிலையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

• • •

## வடக்கு மீனவர் ... தொடர்ச்சி ...

நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது.

ஆகவே, கடற்படையைப் பொறுத்தவரையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுப்பது நீண்ட கால முக்கிய பொறுப்பாக இருக்க போகிறது. அப்படியான நிலையில் அதனை தடுப்பதற்கு ஏற்றதொரு பலமான கடற்படையை அது கட்டியெழுப்பி இருக்க வேண்டும். ஆனால் அதற்கு கடற்படை முயலவில்லை. வடக்கு கடற்பரப்பை அண்மித்த பகுதிகளை ஆக்கிரமிப்பதையே இலக்காக கொண்டிருக்கின்றது.

வடக்கு மீனவர் சங்கங்களைப் பொறுத்தவரையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் சம்பந்தமாக பலவிதமான விசனங்களை கொண்டிருக்கின்றன. அதில் குறிப்பாக, இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் விலகி நடக்கும் போக்கும், சர்வதேச அழுத்தங்களும் காரணமாக கடற்படையினர் முழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை என்பதும் முக்கியமானது.

கடற்படையின் நடவடிக்கைகள் கடந்த சில ஆண்டுகளில் கணிசமாக குறைந்துவிட்டன. ஒருபக்கம் வடக்குப் பகுதிகளில் போதிய ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதும், மறுபக்கம் கடற்படையினர் சில நேரங்களில் கைது செய்தாலும், கப்பல்கள் விரைவில் விடுவிக்கப்படுகின்றன என்பதும் தங்களின் நம்பிக்கையை முற்றிலும் குலைப்பதாகவும் குறிப்பிடுகின்றன.

மேலும் கடற்படையினர் தொடர்ந்தும் சட்டவிரோத மீன்பிடிப்பை தடுப்பதில் கையறு நிலையில் இருப்பதற்குக் காரணம் அரசியல் அழுத்தங்கள் தான் என்றும். வடபகுதி கடல்வளங்கள் அழிந்து செல்லும் போதிலும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை பெரும் கவலைக்குரியதாக மாறியுள்ளது என்றும் மீனவ சங்கங்கள் கூறுகின்றன.

இவ்வாறான நிலையில், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் பற்றி கரிசனைகளை வெளிப்படுத்துகின்றபோது, தமிழகத்திலும், இந்தியாவிலும் குறித்த விடயத்துக்கு தீர்வளிப்பது பற்றி ஆராய்வதற்கு பதிலாக கச்சதீவு விவகாரத்தை கையிலெடுக்கும் போக்கு தீவிரமடைந்து காணப்படுகின்றது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கச்சதீவு விடயம் ஒரு 'அரசியல் கருவியாக' மாறியுள்ளது. தற்போதைய தி.மு.க. ஆட்சியிலிருந்து விஜயின் தமிழக வெற்றிக்கழகம் வரையில் அனைத்து கட்சிகளும் கச்சதீவின் உரிமையை மீளப் பெறவேண்டும் என்றே வலியுறுத்தி வருகின்றன. ஆனால் சட்டவிரோத மீன்பிடிப்பை தவிர்ப்பதற்கான நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்கு திராணி இருப்பதாக காண முடியவில்லை.

தமிழக முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் கச்சதீவு விடயத்தில் இந்திய மத்திய அரசை குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடிகளை ஒழிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசோ அல்லது மாநில அரசோ எடுக்கவில்லை.

ஏனென்றால், இழுவைப்படகு உள்ளிட்ட சட்டவிரோத மீன்பிடி முறைகளின் முதலீட்டாளர்களாக இருப்பவர்கள் இந்தியா, தமிழ்நாட்டைச் சேர்ந்த பெரு வர்த்தகர்களும், அரசியல்வாதிகளும் தான்;. அப்படியிருக்கையில் அவர்களால் எவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்?

இவ்வாறான நிலையில், தமிழக மீனவர்களும் தங்களது வாழ்வாதாரத்துக்காக போராட்டங்களை நடத்துகின்றார்கள். சரியான கோரிக்கைகளை முன்வைக்கின்றார்கள். ஆனால் இழுவைமடி முறையிலான மீன்பிடியை கைவிடுவதற்கு தயாராக இல்லை.

எது எவ்வாறாக இருந்தாலும் இரு நாடுகளின் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்க இரண்டு நாடுகளும் பயனுள்ள தீர்வுகளை உடனடியாக எடுக்க வேண்டும். முதலாவதாக, இரு நாடுகளும் ஒருங்கிணைந்த கடல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகிறது. இரண்டாவதாக, இழுவைபடகு மீன்பிடி முறைகளை முற்றிலும் தடை செய்யும் சட்ட நடவடிக்கைகளை இந்தியா விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

மேலும், இலங்கை கடற்படையினரின் செயற்றிறனை அதிகரித்து, சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கானசுதந்திரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடிப்பை அரசியல் நட்பு காரணமாக விடுவிப்பதை நிறுத்தி, கடல்வளங்களை பாதுகாக்க நம்பிக்கையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இல்லையெனில், வடக்கு, தமிழக மீனவர்கள் இரு நாட்டு அரசியல் நாடகங்களுக்குள் சிக்கி நரபலியாகும் நிலைமையும் வடக்கு கடல்வளம் அழிவின் விளிம்புக்குச் செல்லும் நிலைமையும் துயர நிலைமை தொடரும் என்பது தான் கடைசி உண்மை. • • •






இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்









